722

Reg. No. M. 2147.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JAN 1928
MADRAS

Vol. 10 புத்தகம் 10	பிரபவஹூ மார்கழிமீ 1உ 1927-ம்வஹூ டிசம்பர்மீ 16உ	**No. 9** பிரதி. 9

Contents	Page	பொருளடக்கம்	பக்கம்
The Interest evinced by the ryots and the Agricultural Department in effecting Some improvements.	205	விவசாய சீர்திருத்தங்கள் சிலவற்றில் விவசாய டிபார்ட்மெண்டாரும் கிருஷிகருமெடுத்துக் கொண்டிருக்கும் சிரத்தை	205
News and Notes	208&231	குறிப்புகள்	208 & 231
Paddy cultivation in Italy	209	இத்தாலிதேசத்தில் நெல் சாகுபடி	209
Coconut	213	தென்னை	213
Coconut Errata	221	தென்னை பிழை திருத்தம்	221
Correspondence	222	நிருபம்	222
Almanack	232	பஞ்சாங்கம்	232

Editor Rao Bahadur J, Chelvaranga Raju
"Jagannadha Baugh" Saidapet.
Annual Subscription Including Postage Re. one only.

Copy Right] [Registered

"கிருஷிகன்"

சந்தா முதலிய விவரங்கள்

(1) எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்த போதிலும் அந்த வருஷ சித்திரை மாதத்திலிருந்துதான் கணக்கு வைக்கப்படும். கூடிய வரையில் அந்தந்த வருஷத்திய முந்தின சஞ்சிகைகளைக் கொடுக்கப்படும்.

(2) வருஷ சந்தாவாகிய ரூபாய் ஒன்றை காலணாதபால் முத்திரைகளாக வாகிலும், அல்லது மணியார்டர் மூலமாயும் அனுப்பலாம்: வெளி நாட்டார் ரூ 1—4—0 அனுப்பவேண்டும்.

(3) பத்திரிகை தவறாது பிரதி தமிழ் மாதம் முதல் தேதி இங்கிருந்து அனுப்பப்படும். பத்திரிகை குறிப்பிட்ட காலத்தில் தங்களுக்குச் சேரா விட்டால் அப்போதே நமக்கு அவ்விஷயத்தைத் தெரிவித்தால் பத்திரிகை சேராத விஷயத்தைப் பற்றி விசாரணை செய்வோம். 10 தினங்களுக்கு அதிகமாய் தாமதித்து எழுதும் கடிதங்கள் கவனிக்கப் பட மாட்டா.

(4) விவசாயமும் அதைச் சார்ந்த விஷயங்களும் தவிர இதர விஷயங்கள் இப்பத்திரிகையில் வெளிவரா. அதிலும் எவ்வித நிந்தனையுள்ள விஷயங்களும் அங்கீகரிக்கப் படமாட்டாது.

(5) இப்பத்திரிகையின் சகல உரிமைகளையும் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இதில் எழுதும் விஷயங்களை எழுத்து மூலமாய் அனுமதிபெறாமல் எவரும் எடுக்கக்கூடாது.

"கிருஷிகன்" மானேஜர்.

ஜெகந்நாதபாக், சைதாப்பேட்டை

கம்மபாலன்

தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதீயப் பத்திரிகை இஃதொன்றே. கிராம வாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வேங்கடசாமி நாயுடு,

பத்திராதிபர் கம்மபாலன்,

திருத்தாங்கல்.

Reg. No. M. 2147.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

Vol. 10 புத்தகம் 10	பிரபவ௵ மார்கழி௴ 1௳ 1927-ம்௵ டிசம்பர்௴ 16௳	No. 9. பிரதி. 9.

The Interest evinced by the ryots and the Agricultural Department in effecting some improvements.

விவசாய சீர்திருத்தங்கள் சிலவற்றில் விவசாய டிபார்ட்டுமெண்டாரும் கிருஷிகரும் எடுத்துக் கொண்டிருக்கும் சிரத்தை.

ஜூலைமாதம் விவசாய டிபார்ட்டுமெண்டாரால் ஜனங்களின் உபயோகத்துக்காக பிரசுரித்திருக்கும் மாதாந்தரத் துண்டு பத்திரிக்கையில் திருச்சினாப்பள்ளி ஜில்லா அதாவது 5வது சர்க்கிளில் விவசாய டிபார்ட்டுமெண்டார் செய்திருக்கும் வேலைகளில் மேல்கண்ட சர்க்கிளில் ஐக்கிய விவசாயச் சங்கங்கள் செய்திருக்கும் வேலையைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் மருதூரில் ஒரு ஐக்கிய விவசாயச் சங்கம் புதிதாய் ஸ்தாபித்ததாயும் அதை மருதூர் ஆன்ஸ்டெட் ஐக்கியவிவசாயச்சங்கம் என்று பெயரிட்டிருப்பதாகவும் குறித்திருக்கிறதுடன் அந்த சங்கத்தார் வேலைசெய்து விவசாய சீர்திருத்தங்களைப் பரீட்சித்து அனுஷ்டிக்கும் பொருட்டு சுமார் 20 ஏகரா நிலம் அச்சஙகததுடன் சேர்க்கபபட்டிருக்கிற தென்றும் அதை ஜூலைமாதம விவசாய டைரெக்டர் அவர்கள் வேலை ஆரம்பம் செய்யத் திறந்து வைத்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சங்கங்கள் அந்தஜில்லாவில் இதற்குமுன்னமே சில ஸ்தாபனமாயிருக்கிற தென்பதை ரிப்போர்ட்டுகளில் வாசிக்க நமக்கு

அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இச்சங்கங்கள் சுமார் இருபது வரை வளர்ந்திருப்பதுடன் சங்கத்தார் உபயோகத்திற்காக சல்பேட் ஆப் அம்மோனியா என்று சொல்லும் செயற்கை எருவையும் வாங்கி சேர்த்து வைத்திருக்கிறதென்றும் எழுதப்பட்டிருக்கிறது. நமது விவசாய டிபார்ட்டுமெண்டாரும் ஆங்காங்கு இருக்கப்பட்ட கிருஷிகரும் இந்தநூதன எருவைப் பரீட்சை செய்து பார்க்கவும் கையாடவும் எடுத்திருக்கும் ஊக்கத்தில் நூற்றில் ஒரு பங்காவது எங்கும் கிடைக்கக் கூடுமான தொழு எருவை சரியாய் சேகரித்து உபயோகப்படுத்துவதில் காட்டினால் நமது கிருஷிகர் முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் அஸ்திவாரம் நாட்டினதாகக் கருதக்கூடும். இப்படி நாம் இங்கு எழுதுவதை விவசாயடிபார்ட்டுமெண்டில் உழைத்துவரும் நமது இந்து சகோதரர்களும் இராஜதானி பூராவிலுமுள்ள கிருஷிகரும் நாம் இவ்விஷயத்தைச் சரியானபடி யோசித்துப்பாராமல் எழுதியிருப்பதாய் எண்ணக்கூடாது. ஏனென்றால் எல்லா தேசங்களிலும் எல்லா விவசாய நிபுணர்களும தொழு எருவைப போல் மேன்மையான எரு கிடையாதென்றும் அதை நிலத்திலிடுவதினால் நிலத்தின்வழம் விருத்தியாகி வருமெனவும் அபிப்பிராயப் பட்டிருப்பதுடன் பரீட்சைகளினாலும் நிரூபித்திருக்கிறார்கள். திருஷ்டாந்தமாய் இவ்விராஜதானி சம்பந்தப்பட்டவரை இப்போது கவனித்துப் பார்ப்போம். இவ்விராஜதானியில் விவசாய விஷயமாய் கவர்ண்மெண்டார் சீர்திருத்தங்கள் செய்யப்பிரயத்தனப் செய்தது முதல் இத்தொழு எரு விஷயமாய் என்ன செய்திருக்கிறார்களென்றும் கிருஷிகர் அதை எம்மட்டும் கையாடி அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்களென்றும் யோசித்துப் பார்த்தால் இது விசிதமாகும்.

விவசாய சம்பந்தமாய் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கவர்ண்மெண்டாருக்கு காலஞ்சென்ற மெஸ்தர் ராபர்ட்ஸன் துரையவர்கள் சைதாப்பேட்டையில் விவசாய சீர்திருத்த விஷயமாய் 1869ம் ஹு நியமித்திருந்த பாரம் கமிட்டியாருக்கு தொழு எரு பரிபாலனத்தைக் குறித்து முதல் முதல் இவ்விராஜதானியில் வற்புறுத்தி 1871-ம் வருஷம் முதல் கொண்டு சைதாப்பேட்டையில் ஸ்தாபித்த விவசாயபண்ணையில் இவ்விஷயத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரச் செய்து ஜனங்களுக்கு இவ்விஷயத்தின் சிலாக்கியத்தை புகட்டி வந்தார். அதுமுதல் கொண்டு பிரசுரித்து வந்த ரிப்போர்ட்டுகள் துண்டு பத்திரிகைகள் முதலியவைகளிலெல்லாம் இவ்

விஷயம் கிருஷிகருக்கு முக்கியமான முன்னேற்றம் அடையும் சாதனங்களில் ஒன்று என்று பேசியிருக்கிறது. இராஜதானி பூராவுக்கும் விவசாய அபிவிருத்தி விஷயமாய் ஒரே டெப்டி டைரெக்டர் தானிருந்த அக்காலத்தில் விவசாய அபிவிருத்திக்காக இவ்விராஜதானி பூராவுக்கும் சில ஆயிரம் ரூபாய்கள்தான் கவர்ண்மெண்டார் கொடுத்து வந்தார்கள். அப்பால் 1889ம் வருஷம் இராஜப்பிரதிநிதியவர்கள் இந்தியாவின் விவசாய விஷயங்களைக் குறித்து சுற்றிப் பார்த்து ரிப்போர்டு செய்யும்படி டாக்டர் வால்சர் சிமோனை அனுப்பிய போது அவரும் இத்தொழு எருவின் சிலாக்கியத்தை குறித்தும் அதை சரியானபடி பாரமரித்து உபயோகிக்ககிருஷிகருக்கு சாத்தை ஊட்டவேண்டு மென்றும் எழுதி இருக்கிறார். அப்பால் 1905ம வருஷம் விவசாய சீர்திருத்தங்களுக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சிலவு போதாது இவ்விஷயத்தில் கவர்ண்மெண்டார் லக்ஷக்கணக்காய் சிலவு செய்து அபிவிருத்தி செய்ய வேண்டியது கவர்ண்மெண்டாருடைய முக்கிய கடமைகளில் ஒன்று என்று ஸ்திரப்படுத்தி விவசாய இலாகாவை சீர்திருத்தி ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்து இராஜதானி பூராவுக்கும் ஒரு டெப்டிடைரெக்டர் இருந்ததற்குப் பதில் இவ்விராஜதானியை 8 சர்க்கிள்களாய் செய்து எட்டு விவசாய நிபுணர்களை நியமிக்க வேண்டுமென்று ஆரம்பித்த பின்னரும் இத்தொழுஎரு சேகரிப்பதிலும் பரிபாலனம் செய்வதிலும் ஊக்கமெடுத்து கிருஷிகரை கையாளச் செய்தலே முதல் வேலை என்று எல்லா விவசாய நிபுணர்களும் ஒன்று கூடி பூசாவில் போர்ட் ஆப் அகிரிகல்சரில் பேசி முடித்து பிரேரேபனைகள் செய்து மிருக்கிறார்கள். அப்பால் திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்தாபித்த கோவில்பட்டி விவசாயப் பண்ணையிலும் தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஸ்தாபித்த பாலூர் விவசாயப் பண்ணையிலும் பெல்லாரி ஜில்லாவில் ஸ்தாபித்த பெல்லாரி, அகரி முதலிய விவசாயப் பண்ணைகளிலும் குண்டூர் ஜில்லாவில் ஸ்தாபித்த குண்டூர் விவசாயப் பண்ணையிலும் கோதாவரி ஜில்லாவில் ஸ்தாபித்த சாமல்கோட்டா, அனகாபள்ளி, விவசாயப் பண்ணைகளிலும் மலையாளத்தில் ஸ்தாபித்த தாலிபரம்பா விவசாயப் பண்ணையிலும், கோயம்புத்தூரில் ஸ்தாபித்த மத்திய விவசாயப் பண்ணையிலும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஸ்தாபித்த மங்கலஹூர் விவசாயப் பண்ணையிலும் கோர்ட் ஆப் வார்ட்ஸ்களில் ஸ்தாபித்த சிவகிரி பித்தாபுரம் காவல்பாரா முதலிய பண்ணைகளிலும் இத்தொழு எருவைச்சேகரித்து பரிபாலனம் செய்வ

இல் அனுஷ்டிக்க வேண்டிய விஷயங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன.

இப்படி மேல் சொன்ன பிரகாரம் 1871ம் வருஷம் முதல் கவர்ன்மெண்டாரால் பிரசுரம் செய்து நிரூபித்துக் காட்டியிருக்கும் இம்முக்கிய சீர்திருத்தத்தை சுமார் 60 வருஷக்காலம் வரை எத்தனை கிருஷிகரும் மிராசுதார்களும் இதுவரை கையாடி அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்களென்று கணக்கிட்டுப் பார்த்தால் அனேகமாய் லட்சத்துக்கு ஒருஆள்கூட இருக்கமாட்டார்களென்றே சொல்ல வேண்டும். நாம் விவசாய டிபார்ட்டு மெண்டில் உத்தியோகமாயிருக்கும்போது வடஆற்காடு ஜில்லாவிலுள்ள குடியாத்தம் பண்ணைக்குச் சுற்றுப் பக்கத்திலுள்ள பலகிருஷிகர் கையாடிக் கொண்டிருந்தார்கள். இப்போது கையாடிவருகிறார்களோ இல்லையோ தெரியாது. ஆனால் ஜூலை மாதத்திய விவசாயத்துண்டுப் பிரசுரத்தில் திருச்சிறாப்பள்ளி ஜில்லாவில் சுமார் 93 பெயர் இவ்விஷயத்தில் ஊக்கம் செலுத்திக் கையாடி வருகிறார்களென்று குறிக்கிருக்கிறதைப் பார்க்க நமக்கு மெத்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இப்படி 1871ம் வருஷம் முதல் நாளதுவரை இக்கொழுஉரவின் சிரேஷ்டத்தையும் சிலாக்கியத்தையும் குறித்து எல்லாதேசங்களிலும் எல்லா விவசாயப் பண்ணைகளிலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து நல்ல விஷயமென்று காட்டி ரூபித்திருக்கும் சீர்திருத்தம் ஏன் இதுவரை ஜாஸ்தியாய் நமது இராஜதானியில் கிருஷிகரால் கையாளப்படவில்லையென்பதன் காரணத்தை இனி ஒருமுறை ஆராய்வோம்.

NEWS & NOTES.

குறிப்பு.

1927-ம் வருடம் டிசம்பர்மீ இறுதியில் கூடும் 43-வது காங்கிரஸ் மஹாசபையுடன் "அகில இந்திய விவசாய வியாபாரக் கைத்தொழில் பொருட்காட்சி நடைபெறப்போகிறது. இப்பேர்ப்பட்ட காக்ஷி சென்னையில் நடந்து பல வருஷங்களாய் விட்டன. ரெயில்வே கம்பெனியாரும் குறைந்த தொகைக்கு போகவர டிக்கட்டுகள் கொடுப்பார்கள். காக்ஷி சாலையில் பலநூதன விவசாய இயந்திரங்கள் வைத்து வேலைசெய்து காட்டுவார்கள். நமது சந்தாநேயர்கள் 1927ம் வருடம் டிசம்பர்மாதம் 21தேதி முதல் 1928ம் வருடம் ஜனவரிமீ 15தேதி வரை சௌகரியப்பட்டபோது நேரில் வந்து பார்ப்பதால் பல நன்மைகளடையக் கூடுமென்பதைத் தெரிவிக்கிறோம்.

Paddy cultivation in Italy.

இத்தாலி தேசத்தில் நெல் சாகுபடி.

இந்தியாவைப்போன்ற ஓர்தேசத்தில் நெல்தான் மிகவும் பிரதானமான (ஜீவாதாரமான) ஆகாரம். அநேக நூற்றாண்டுகளாக இங்கு பூமி பண்படுத்தப்பட்டு, வேளாண்மை முறைகள் இந்தியாவில் மிகவும் உயர்வை அடைந்திருக்கின்றன. விளைவிலும் இந்தியாவானது ஒரு தேசத்திற்கும் தாழ்ந்ததல்ல.

தேச விருத்தாந்தத்தை நோக்குமிடத்து, இந்தியாவில் நெற்பயிர் விளையுமிடந்தான் அதிகம். 1920–25ம் வருஷங்களில் இந்தியாவில் 80,683,900 ஏக்கர்கள் நெற்பயிரிடப்பட்டு வந்திருக்கின்றன. ஆசியாவில் இதற்குச் சமமாக எந்த தேசமும் நிற்கவில்லை. ஐரோப்பாவிலோ சில இடங்களில் தான் நெல்லானது அபூர்வமாகப்பயிரிடப் பட்டு வருகிறது. அவைகளுள் இதாலியும், ஸ்பெயினும் முதன்மையான ஸ்தானத்தை வகித்து நிற்கின்றன. இதாலியில் ஆண்டுதோறும் 300,000 ஏக்கர்கள் நெல் விளைவிற்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவுடன் இதை ஒப்பிடும் பக்ஷத்தில் இது எம்மாத்திரம்? இந்தியாவில் நெல்விளைவு பெருவாரியாக விருப்பதால், மற்ற தேசங்களுக்கு இப்பயிர் வேண்டுமென்ற அவசியம் ஏற்படுவதில்லை. ஆதலால் அதைத் தவிர மற்ற விளைபொருள்களில் அவர்கள் புத்தியைச் செலுத்தி விடுகிறார்கள்

ஒரு ஏக்கரின் விளைவு.

இந்தியாவில் ஒரு ஏக்கர் எவ்வளவு கொடுக்கின்றதென்பதைச் சிறிது நோக்குவோம். மேற்கூறப்பட்ட ஏக்கர்களிலிருந்து இந்தியாவில் 47,365,017 டன் தானியங்கள் எடுக்கப்படுகின்றன. இதாலியிலோ 491,968 டன்களெடுக்கப்படுகின்றன. அதாவது கணக்குப் பார்க்குமிடத்து இந்தியாவில் ஒரு ஏகருக்கு 1310 பவுண்டும் இதாலியில ஏகருக்கு 3670 பவுண்டும் விளைகின்றதெனத் தெரிகிறது. இது மிகவும் அதிகமே! ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்கு முன்னர் மிஸ்டர் காலத்தி என்ற அறிஞர் மேற்கூறிய விஷயத்தை யொட்டி ருசிகரமான விபரங்களை "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகையில வரைந்தார். அவர் ஓர் இதாலியர், வேளாண்மையில் இதாலி கைக்கொண்டுள்ள சிறந்த முறைகளைப்பற்றி அவர் விஸ்தாரமாகக்கூறியுள்ளார். சென்றவெயிற் காலத்தில நான் விடுமுறைப் பிரயாண

த்தை யொட்டி ஐரோப்பா சென்றபோது இதாலி சென்று வேளாண்மை முறைகளை நேரில் பார்க்கவேண்டுமென்று அவாவுற்றேன். சர்வதேச வேளாண்மை ஸ்தாபனத்தின் புத்திமதிக்கிணங்க நான் இதாலியில் மிக்க முக்கியமான வர்ஸல்லி என்ற இடத்திற்குச் சென்றேன். அங்கு நெற்பயிர் மிகவும் அதிகம். அங்கு வேளாண்மைப் பரிசோதனைசாலை யொன்றிருக்கிறது. அதற்குத் தலைவர் புரொபஸர் நாவெல்லி. அவரது சாமர்த்தியமே அவ்விடத்தில் அதிகவிளைவிற்குக் காரணம். எவ்வளவு தூரமான விடத்திற்கும் வேளாண்மையை விருத்தி செய்வதற்காக அவர் மோட்டார் வண்டியில் செல்லுவார். போ என்ற நதியை யொட்டியிருக்கும் வர்ஸல்லி, மார்ட்டோரா முதலிய 5, 6 பிரதேசங்கள் அதிகமாக விளையக் கூடியது. போ நதியின ஓரமாக ஸமுத்திரம் வரையில் பூமியானது சிறிது சிறிதாகச் செப்பனிடப்பட்டு வேளாண்மைக்குரித்ததாகச் செய்யப்பட்டிருக்கிறது. தென்புறத்திலோ நீர்ப்பாசன வசதிகள் கிடையாது. 1870ம் ஆண்டிலிருந்து 1924ம் ஆண்டுவரை ஏகருக்கு எவ்வளவு விளைந்திருக்கிறதென்பது கீழ்க்கண்ட ஸ்டேட்மெண்டிலிருந்து தெரியவரும்.

சுமார்

வருஷம்.	ஏக்கர்கள்.	பவுண்டுகள்.
1860—74	465,340	48,10,90,000
1879—83	402,700	35,84,90,000
1890—94	364,900	30,46,[illegible]0,000
1901—05	350,730	44,34,50,000
1910—14	289,996	48,78,70,000
1915—19	277,236	52,18,30,000
1920—24	242,816	43,98,80,000

இதிலிருந்து ஏக்கர்களின்குறைவும், விளைவின் ஆதிக்கமும் நன்கு தெரிகிறது. இதற்குக் காரணம் பூமியின் செழுமையல்ல. சிறந்த வேளாண்மையின் முறைகளே. கருங்கல் மலைவழியாக வரும் போ நதியானது அதனுடன் செழுமையான மண்ணைக் கொண்டுவந்துவிடவில்லை. இதலியின் வேளாண்மை முறைகளுக்கும் நமது முறைகளுக்கும் ஒற்றுமையிருக்கிறது. இதாலியிலும் பெரும்பாலும் விதைகளைக் கையினாலேயே விதைக்கிறார்கள்.

இது இந்திய முறையே. களையெடுப்பதில், இந்தியாவைக் காட்டிலும் இதலியில் சரீரப் பிரயாசை யெடுத்துக்கொள்ளப் படுகிறது. நமது ஸ்திரீகளைப்போலவே இதாலிய ஸ்திரீகளும் வயல்களில்சென்று களை யெடுக்கிறார்கள். அறுப்பும் அந்த அரிவாளைக் கொண்டே அறுக்கப்படுகிறது. களை யெடுப்பதற்காக இயந்திரங்கள் கண்டு பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வயல்களின் கரை

இந்தியாவின் விளைநிலங்களில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது அவைகளின் கரைகளே. சாதாரணமாகப் பார்ப்போர்க்கு விளைகாலங்களில் வயல்களிலுள்ள கரைகள் நன்கு புலனாகின்றதில்லை, பச்சைப்பசேரென்ற சமுத்திரம்போல் தோன்றுகிறது. விளைநிலங்களை முதலாவதாக சமபூமியாகச் செய்ய வேண்டும். எத்தனையோ உழைப்பிற்குப் பிறகுதான் விளைநிலங்கள் பார்ப்பதற்கு அழகாய் பரிணமிக்கின்றன. இந்தியாவில் பூமியைப் பண்படுத்துவதற்காக எருமை மாடுகள் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. இத்தாலியில் எருமைக்குப் பதிலாக குதிரைகள் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. இத்தாலியில் பூமிச் செழுமைக்குக் காரணங்கள் பலவுள, அங்கு நிலங்களில் மிகவும் மெதுவாக ஜலம் பாயும்படி செய்யப்படுகிறது. இந்தியாவிலுள்ள வயல்களில் தண்ணீரைத் தேக்கி வைப்பது போன்று ஆங்கு அனுஷ்டிக்கப் படுவதில்லை. சகல கிருஷிகர்களும் தங்கள் நிலங்களுக்கு தண்ணீரை அளந்து விடுகிறார்கள் (அதாவது அதிகமாகப் போகவிடாமலும் குறைந்து விடாமலும்) அங்கு கிருஷிகாகளின் சங்கம் பல விருக்கின்றன. அச்சங்கமானது தண்ணீரைப் பாசனத்திற்காக ஏப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர்மாத இறுதிவரை மொத்தமாய் ஏதாவது கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்துவிடுகிறது, தனிக்க நபர்கள் இச்சங்கத்திற்கு அவரவர்கள் தாங்கள் உபயோகப் படுத்திக் கொண்ட தண்ணீருக்குதக்கவாறு வரிகொடுத்து விடுவது வழக்கம், இதனால் தண்ணீரை அதிகமாக செலவிட்டு விடக்கூடாதென்ற சிரத்தை ஒவ்வொருவருக்கு மிருந்து வருகிறது. ஜலதத்திற்கு அனுவசியமான சேதம் வாராதவாறு சங்கங்களும் சிரத்தை யெடுத்துக் கொள்ளுகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டில்தான் இத்தாலியில் கால்வாய்களின் மூலம் ஜலம் பாய்ச்ச ஆரம்பித்தார்கள், நம் இந்தியாவிலோ இம்முறை வெகு நாளாகயிருந்து வருகிறது. எனினும் அம்முறையில்

இது காலே இத்தலியானது, இந்தியாவைக் காட்டிலும் எத்தனை யோ மடங்கு சிறந்து விளங்குகின்றது. கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமான கால்வாய்களைத் தவிர, கிருஷிகர்களுக்குச் சொந்தமான கால்வாய்களுமிருக்கின்றன. தண்ணீர் சேதமாகாதிருப்பதற்காக இத்தாலியில் செலவிடப்படுவதைக் காட்டிலும், இந்தியாவில் அதிகமாகவே செலவழிக்கப்படுகிறது. எனினும் இந்தியாவில் அனுவசியமாகத் தண்ணீர் எவ்வளவோ சேதமாகிறது.

மற்றோர் ருசிகாமான விஷயம் யாதெனில் இந்தியாவைப்போல் ஆங்கு இடைவிடா நீர்ப்பாசனமிருப்பதில்லை. விளைவுகாலத்தில் இருமுறை நிலங்கள் காய்ந்து போய்விடுகின்றன. இதனால் சில சௌகரியங்களிருக்கின்றன. ஆனால், விளை நிலங்களில் அடிக்கடி தண்ணீர் இருப்பதனால் பூமியின் நிலைமை ஓரே சீராக செய்யப்படுகிறது.

இத்தாலியில் தொடர்ச்சியாக ஓரிடத்திலேயே நெல் விளைவு செய்வதில்லை, *முதலில் நெல் பின்னர் கோதுமை, கேழ்வரகு பயிரிடப்பட்டு மீண்டும் நெல் பயிரிடுவார்கள். இவ்வாறு மாறி மாறிப் பயிரிடுவதால பூமியானது நன்கு பண்படுத்தப் படுகிறது. வர்ஸெல்லி என்ற வட்டத்தில் நூற்றுக்கு 55 பாகம் நெற்பயிர் நிலங்களிருக்கின்றன. மற்ற தானியங்கள் சிலவிடையாக விருக்கின்றன. நெற்பயிரிடுவதானது பூமியின் நேர்மைக்கும் சீதோஷ்ணத்திற்கும், தகுந்தவாறு இருக்கும். துவக்கத்தில் பூண்டுகள் எடுப்பதற்கு அதிகப்பணம் செலவழிக்கப்பட வேண்டியிருக்கிறது. பூமியின் செழுமைக்குதகுந்தவாறு இதன் சிரமம் குறைகிறது. விஷபணியால் பயிர்கள் கெடாமலிருப்பதற்காக சில செயற்கை முறைகளையும் கையாண்டு வருகிறார்கள். இவ்வாறு சிறந்த முறைகளால் பயிரானது ஓரே விதமாக யிருந்து வருகிறது. நான் ஓரிடத்திலிருந்து வெகு தூரம்வரைப் பார்த்த பொழுது பயிர்கள் பச்சைக் கம்பளம் விரித்ததுபோல் ஓரே உயரம், ஓரே நிறம், ஓரே பலனுடையவைகளாயிருந்தன. (தொடரும்)

டி. ஆநந்தராவ்,

விவசாய டிப்டி டைரெக்டர் 4.வது சர்க்கிள்.

---

* இந்தியாவில் நெல் விளையும் சிலபாக நிலங்களில் அதாவது வடிகால் வசதியுள்ள இடங்களிலெல்லாம் "நஞ்செய் மேல் புஞ்சை" நிலங்கள் எனப் பேரிட்டு ஒருபோகம் நஞ்செயும் ஒருபோகம் புஞ்சையும் பயிர் செய்து வருகிறார்கள். வடிகால் வசதியில்லாத இடங்களில் நஞ்செய் தவிர வேறு பயிர் செய்ய சாத்தியமில்லாமலிருக்கிறது, திருஷ்டாந்திரம் தஞ்சாவூர் ஜில்லா. ப. ர.

COCONUT.

(Continued from page 196 of Vol. X.)

தென்னை

கிருஷிகன் 10 ம் வாலம், 196ம் பக்கத் தொடர்ச்சி

ஜாதியல்லது வகுப்பு.

தென்னையில் பெரிய தினிசும் குட்டையான (நக்கவாரி) சிறு தினிசும் பிரதானமானது. அதனுள்ளும் பெரியஜாதியில் தண்டில் மட்டை விழுந்த வடு அடுத்தடுத்து நெருங்கியதும், மட்டைவிழுந்த வடு அகன்று விலகி தாரம் தாரமாயு மிருக்கிறது. அவ்வாறே குட்டை சாதியிலுமுண்டு. இவைகள் சாதி வேற்றுமையோவென்று சுவனிக்கப்பட்டது. ஊன்றி யோசித்துப் பார்த்ததில் அவைகள் வெவ்வேறு ஜாதியல்லவென்றும் வளமான நிலத்தில் மரம் புஷ்டியா யுண்டானதில் மட்டை விழுந்தவடு அகன்றும் கேவலமான நிலத்தில் உண்டான மரங்கள் மட்டை விழுந்தவடு நெருங்கியதாகவும் காணப்பட்டது. மட்டை விழுந்த வடு 1க்கு ப் மாதம் வயதாகுமென்று சொல்வதுண்டு. அனுபவத்தில் அது சரியாய் வரவில்லை.

தென்னைக்கு ஆயிசு 100 வருடமென்று சொல்வதுண்டு. அனுபவத்தில் 70. 80. வருடத்தில் மரம் படுகையாய் விடுது. நக்கவாரி சாதி 40. 50. வருடத்தில் மரம் படுகையாகிறது.

மட்டையோலை, தேங்காய் மேற்றோடு, உரிமட்டை, கூந்தல்களில் உள்ள நிறத்தைப் பொருத்து ஜாதி கூறுவதுமுண்டு. பச்சை செகப்பு, மஞ்சள் கலந்த செகப்பு (பௌர்ணமி அமவாசை சந்திரோதயசிகப்பு) வர்ணங்களமைந்துள்ளன.

தென்கன்னடம் ஜில்லாவிலும், மைசூர் ராஜ்ஜியத்திலும் கூந்தல் நார் குறைந்து தேங்காய்மணி பெருத்து உருண்டையாகவிருக்கும். மொலகால் தீவைச்சேர்ந்த எகின் தீவாந்தரக்காய் முட்டை வடிவமாயிருக்கும். காய் சிறுத்திருந்தாலுஞ் சதைப்பற்றதிகமா யிருக்கும். உள்ளே ஜலங்குறைவு. நிகோபார்தீவிலும் சிலோன் தீவு சில பாகத்திலுங் கூந்தல் நார்பெருத்து பெருங்காத்திரமும் 3 பட்டமாயும் மணிசிருத்திருக்கும், சிலோன்தீவு சிலபாகம் பெரும்பாலும் காயுருண்டையாயும்மணிபெருத்து காத்திரமாயுமிருக்கும். அங்கே யாழ்ப்பாணம் காய் ரெம்ப காத்திரமாயிருக்கும். மால்டிவ் தீவு காய் ருசிகுடுப்பது. கண்ணும்பு சம்மந்தமான பவழக்கொடி. பார்மேல் தீவுண்டா யிருக்க வேண்டும். மேலும், தேங்காயுருண்டையாய் நீண்டும் பட்டம் போட்டு.

மாதிரியாயும், உருண்டையில் விலாப் பொதுமியும் தூர்மட்டும் உள்ளே சுருங்கியும் உச்சி நீண்டும் பின்னும் பலவிதமாக காயுருவம் அமைந்திருக்கும். தேங்காய் மேல்மட்டை உரித்து மணியைப் பார்க்கினும் பலவிதம் உருவமைந்திருக்கும். ஒவ்வொன்றையும் பிரித்து பாகுபாடு கூறுவ தசாத்தியம். ஒவ்வோர் பிரதேசமும் உருவத்தை பொருத்தோ நிறத்தைப் பொருத்தோ ருசியைப்பொருத்தோ ஜாதி கூறுவார்கள்.

இலங்கைத் தீவில் 32 வகை தினிசு இருப்பதாக பிரஸ்தாபமுண்டு. அங்கே தென்சமுத்திரப்பக்கம் காலி என்ற பிரதேசத்தில் விதம் விதமான விசேஷ தினிசிருப்பதாகத் தெரிகிறது. சிலோன் டவுனிலிருந்து காலிக்குப்போக ரயில்வசதியுண்டு. அந்தத்தீவு சாதியை விரும்புவோர் சிலோன் ஸ்தாவர தோட்ட சூப்பிரன்டென்டுக்காவது விவசாய விலாகா டைரெக்டருக்காவது பொட்டானிக்கல் கார்டன் சூப்பிரன்டென்டுக்காவது விவசாயசங்க செக்ரடேரிக்காவது எழுதித் தருவித்துக் கொடுக்கும்படி சென்னை விவசாய விலாகாடைரெக்டருக் கெழுதிக் கொள்ள வேண்டும். சிலோனில் சீனிதேங்காய் என்ற தினிசு மிகவினிப்பாயிருக்குமாம்.

சிலோனிலிருந்து சிலஜாதிகள் சென்னை மாகாணத்துக்கு வந்திருக்கிறதை விவரிப்பாம்.

தேங்காய் $\frac{3}{8}$ விளைவாம் வரை தேங்காயுரி மட்டை தின்ன மெதுவாயும் ருசியாயுமிருக்குமாம். தின்னும் பருவம்வரை சிரட்டை உண்டாவதில்லை. பின்பே சிரட்டை உற்பத்தியாகிறது. இதை சிலோனில் நௌஸ் குரும்பை என்பது. இதுசென்னை தேனாம்பேட்டை தோட்டக் கம்பேனியார் வருத்தி வருத்தி செய்திருக்கிறார்களாம்.

தேங்காய் $\frac{3}{8}$ விளைவாம் வரை சிரட்டையில் வழுக்கை ஒட்டுவதில்லை. பின் சிரட்டையில் வழுக்கை ஒட்டிக்கொள்ளும். இதை தயிர் காச்சிஎன்பர். இது சென்னைக்கடுத்த பாப்பாஞ்சாவடியிலிருக்கிறதாம். இந்த ஜாதி இளநீர் ராமேஸ்வரத்தில் விற்பதால் அந்தப் பக்கம் தயிர் காச்சி மரமிருக்க வேண்டும்.

தேங்காய், பூங்காம்பினறி, குலை காம்புடன், தேங்காய் ஒட்டி காய்த்திருக்கும். பனங்காய் குலை மாதிரி ஒட்டி காய்ப்பதால் பனங்காச்சி என்பர். இது சென்னைக்கடுத்த மருடஞ்சாவடியிலும் திருநெல்வேலி டவுண் ஸ்ரீமான் காந்தம் பிள்ளையவர்கள் கிரகத்திலுமிருக்கிறது. இதை சிலோனில் கோத்தாம்பிலி என்று கூறுகிறார்கள்.

சிலோன் காலியில் ரெத்தாம்பிலி ஜாதியுண்டு. அந்த தேங்காய் முற்றும்வரை உரிமட்டை கூந்தல் சதை வெள்ளையாயிருப்பதுக்கு பதில் ரெத்த நிறமாயிருக்கும். இந்த இளநீர் 1க்கு ரூபா ஒன்று முதல் ஒன்றரை வரை கொடுத்து ஜனங்கள் வாங்கி மல்லிகார்ச்சுனம் மருதீசப் பெருமானுக்கு அபிஷேகஞ் செய்கிறார்கள். நெத்து 1க்கு ரூ. ஒன்றரை விதம் வாங்கி திருநெல்வேலி ஜில்லாவுக்கு வந்து விர்த்தியாரம்பித்திருக்கிறது. இந்தமரம் தஞ்சாவூர் ஜில்லா திருவிடை மருதூரில் ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளை வகையரு சில விவசாயிகளிடம் 30 மரம் வரையிருக்கிறது. அதில் 2 மரத்தின் இளநீர் வழுக்கை லேஸ் ரோசாப்பு வர்ணமாயிருக்கிறது. பனம் கொங்கில் சில பனைகொங்கு சிவப்பு நிறமாயிருப்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். அதுபோன்று இளநீர் வழுக்கை ஏற்பட்டுள்ளது. இளநீர் கிரையத்துக்கு கொடுப்போரும் நெத்துவிற்போரும் வெள்ளை இளநீர் ஜாதியை விற்று விடுகிறார்கள். நன்றாய் விசாரித்து வாங்கவேணும். சிலோன்காலியில் வைத்தியத்துக்கு பிரியமாயிருப்பதால் இதை அங்கே 1. $1\frac{1}{4}$ ரூபாய் விலையாக விற்கப்படுகிறது. இதை விருத்தி செய்ய தஞ்சை ஜில்லாவில் முயலாததேனோ? *அமெரிக்கா பிரேசில் தேசத்தில் தென்னை வைத்த 3ம் வருடம் காய்க்கிறது. இது நக்கவாரி சாதிதான்; சிறிதுஞ் சந்தேகமில்லை. சிலோனிலும் நக்கவாரிசாதியே மிகுதியாயுள்ளது. இவைகள் தேங்காய்ப்பறிக்கச் சுலபம் என்றும், புயல்காற்று கொடுமைக்கு தென்னை சாயாதென்றும் அனுஷ்டிக்கப்படுகிறது. வளர்ந்த தென்னைமரம் போல் குட்டையான நக்கவாரி சாயமாட்டாது. தவிரவும் சிலோன்பூமி சாரம் மிகுந்தது. அடிமண் போதாததால் தென்னை 8 கஜத்துக்கு மேல் வளரும்போது மரந்தலைப்பாறிவிடுகிறது. சரியாய் தலைப்பாருதலுக்காக நக்கவாரியை விரும்புவதாகக் கூறவும் ஏதுவுண்டு. ஏகதேசமாயுள்ள பெரிய ஜாதியும் 8 கஜத்துக்கு மேலாகவளரும் போது தலைப்பாறுது. மழைஸ்ரேஷ்டமாய் பொழிவதாயும் காவளபோலே இலைசருகுவிழுந்து மடிந்து நிலம் மெதுவாய் தொய்வு கொடுத்து தென்னை யுண்டாகவிடமாயிருக்கிறது. சிலோன் நிலம்போல் இந்தியாவிலிருந்தால் தென்னை யுண்டாகவே மாட்டாது. சிலோனில் எவ்வளவு மழைபெய்தாலும் ஜலம் பூமியில் புரண்டோடாது. நிலத்தில் உறிஞ்சி சுவரிசிடும்.

தென்னமெரிக்கா (ஹாண்டுராஸ்) என்ற பிரதேசத்தில் (கோஹூன்) என்ற ஒருவகைமரம் ஏராளமாய் காய்க்கின்றனவாம். காய்,

---

*கிருஷிகன் ஐந்தாம் வால்யம் 107ம் பக்கம் பார்க்க

கோழிமுட்டை யளவிருக்கும். அதன் பருப்பு சாதிக்காயளவே யிருக்கும். ராப்பில் 100க்கு 73 பாகம் எண்ணெயிருக்கிறது. காய் உடைக்கப்படுங் கஷ்டம்ஜாஸ்த்தி. உடைக்கும் யந்திரம் தயாரிக்க ஆராய்ச்சி யிருக்கிறது- தேங்காய் கொப்பரையில் 100க்கு 55பங்கும் நாட்டு செக்கெனும் யந்திரத்தில் பிழிய 100க்கு 65பங்கு எண்ணெயுமிருக்கிறதாம். தேங்காயினும் (கோஹூன்) காய் லாபமென்று ஆண்டுராஸ் தேசத்தார் விருத்தியாக்க முயல்கிறார்கள். இங்கே பிரேசில் தேச தேங்காய் வருவது குறையலாம்போலும்.

நிலம் தேர்ந்தெடுத்தல்.

எல்லா நிலத்திலுந் தென்னை யுண்டாய்விடாது. குறிப்பிட்ட சில நிலங்களில் தென்னையுண்டாகும். (1) அழுத்தமான சரள் (2) களிமண் (3) உவர் நிலம் (4) வெள்ளை சரள் (5) வடிகால் வசதியில்லாத நிலம் முதலியதில் தென்னை விர்த்தியாகா. 1. 2. தினிசு நிலம் தென்னைவேர் வெகுவாய் புகுந்து பரவி உணவு கிரகிக்க மாட்டாது. 2வது தினிசு நிலம் மேட்டு பாங்காயமையினும் கோடை காலம் நிலம் வெடித்து வேர்துண்டித்து வெளியே பயிரையழித்த மாதிரி தென்னை விருத்தியைத் தடுக்கும்.* 3-4-வது வகுப்பு நிலம் தென்னை மரத்தின் ஜீவாதாரமானரசம் உருஞ்சி விர்த்தியாக விட்டாது. இலுமிச்சு முதலிய ஊறுகாய் தினுசுகளுக்கு உப்பு அளவுக்கதிகரித்தால் இலுமிச்சங்காய் ரசஞ்சுருங்கி உரிஞ்சிரசமழிந்து ஊறுகாய் கெட்டே போம். அத்தன்மையே 3-4 வகுப்பு நிலத்தின் குணமுமாகும். 4 வது வகுப்புசரள் சுண்ணாம்பு வேகவைப்பதால் சுண்ணாம்பு தீனி தென்னைக்கவசியமென்று ஆதரிப்பதுண்டு. சுண்ணாம்பின் தன்மையை மீறக்கூடிய அளவில் உவருண்டாக்கும். சோடா உப்பு ஜாஸ்தியாயிருப்பதால் கொண்ட கொள்கை நிரைவேராமல் நஷ்டமே சம்பவிக்கும். இந்த நிலத்தில் மயங்கி மோசம் போனவர் மிகுதியுமுண்டு.

5வது வகுப்பு நிலம் எந்த தினிசு பயிரிடினும் வடிகாலில்லாவிடில் பயிர் விர்த்திக்கு வராது. சாக்கடை கழிவுஜலம் வடிவு கால்வாய் புறம்போகாதவரை துர்வாசனை யுண்டாகி தேகவாரோக்ய பங்கமாம். அவ்வாறே நீரின்வேலை நிலத்திலானவுடன் வெளியாய் விடவேண்டும். பாசனஜலம் வடியாதவரை நிலம் புழிப்பும் அழுகல் மடிப்பு குடுத்து தென்னைவேர் பாயவிடாது.வேர் ஆழமாய் இரங்கி செல்லாதவரை தெ

* கிருஷிகன் 10வது வாலம் 140ம் பக்கம் 5வது பாரு களிமண் கெடுதியைப்பார்க்க.

ன்னை செழிக்காமல் இலை வெழுத்து குட்டம் பாய்ந்ததுபோல குறுகிக் கொண்டே போகும். இறுகிய நிலத்திலும் ஜலந்தங்கிய நிலத்திலும் பிராண வாயுவு தங்கமாட்டாது. பிராண வாயுவுவை கிரகிக்காத செடி சரியாயோங்கி வளர்ந்து புஷ்டியாயிரு. ஜலந்தங்கிய நிலத்தில் தென்னை யுண்டாகா தென்பது இப்போ தெரியவரும். நிலம் நன்றாயுழுது பூமி யுலர்ந்து மலர்ந்திருப்பது பிராணவாய்வு பகுலைசாயுலாவி தங்கும். மட்டாய் ஜலம்பாய்ந்து கருஈரந்தங்கிய நிலம் குற்றமன்று. ஓடுகிற தண்ணீரையும் சுவளுகிற ஈரத்தையும் பிராணவாயுவு தொடர்ந்தோடிப்போகும்.

நிலத்தீரஞ் சுவறுங்காலத்தில் நிலங்கிளறிக் கொடுப்பது பிராண வாயுவு வெளியாகாமல் தங்கும்படி செய்வதே கிருஷி சாஸ்திர கோட்பாடாகும்.

செம்மண் மணல் (சிகப்பு வர்ணம் மிகுக்தோறும் சிரேஷ்டம்) **2-3** அடிக்கி கீழ் ஜலம் ஊடுருவி செல்லுஞ்சலக்கசிவு மணல் நிலம், கடலோரத்து மணல், பாழாய்ப்போன நிறுமநத்தமண் (2பங்கு சாம்பலும் 1பங்கு செம்மண் கலந்த மாதிரி கபிலநிறம் போனறது) சுக்கான் சரள்நிலம் (மொச்சை துவரை முதலிய தினிசில் மேல் மூடல் தொலியும் பருப்பு உள்ளிருக்கும். அதுபோன்று சுக்கான் சரளில் மேல்பாகம் செம்மண் மூடி உட்பாகம் கருப்படர்ந்த கல் சிறிதும் பெரிதுமாக சொர சொரப்பாயிருக்கும்) குருமண் (மான்மிருகபுல்லை நிறம்) இளக்கமான செம்பூருன் சரள் ஆற்றோரம் படுகைநிலம் இவ்வித நிலங்களில் தென்னை செழிப்பா யுண்டாகும்.

சுண்ணும்புகல் மிகுத்த பம்பாய்ராஜதானி கோபிஞதபுரம் அழுத்தமான சுண்ணும்பு சரளிலும் கோயமுத்தூர் ஓடைக்கல்லுள்ள பிரதேசமும், திருநெல்வேலிஜில்லா தென்காசி தாலூகா வடகரை, கண்க்கப்பிள்ளைவலசை, பண்பொழி, வேதம் புதூர், நெடுவயல், குணராம நல்லூர் சரகம் கடபோகத்தி முதலிய கிராமங்கள், அழுத கண்ணீர் ஆற்றுவாகரை பக்க தோட்டங்கள், மேல்கரை ஜில்லா அருபிக்கட்லிலுள்ள லக்ஷதீபம் இவைகளில் சுண்ணும்பு சரளிருந்து தென்னை செழிப்பா யுண்டாகி எதேஷ்டமாய் காய்க்கிறது. சுண்ணும்பு சரள் கல்ப்புத்தன்மைக்கித் தக்கவாறு தேங்காய் பருப்பு சதை யதிகப்படுவதும் ருசியுண்டாவதும் மதுரம் மிகுதியாவது மமைகிறது.

அழுத்தமான செஞ்சரள் காக்காய் சரளிலுண்டாகாத தென்னை சுண்ணும்பு சரள் எவ்வளவு கடினமாயினும் வேர்பாய்ந்து செழிப்பாய் காய்க்கிறது. சுண்ணும்பு சரளுள்ள லக்ஷ தீபத்தைப்பற்றி கவனிப்போம்.

இலக்ஷத்தீவுகள் பவழக்கொடிகள் புரைபுரையாய் அமைந்து சுண்ணாம்பும் பிரகாசதமும் அமைந்திருக்கிறது- கடல் பாசம் ஒதுங்கியதால் மரவுப்பும் (போட்டாஷ்) அங்கே மடிந்து அழுகிய ஜலப்பிராணிகளால் பிரகாசதம் அமைந்து தீவுண்டானதால் அந்தத்தீவில் தென்னை ஏதேஷ்டமாயுண்டாகி காய்க்கிறது- இவ்வித எருக்கள் செயற்கை முறையால் சேர்ப்பதை பின் போகப்போக விபரமாயறிவிப்பாம்.

பொதுவாய் பேசுமிடத்து நிலங்கழிப்பின்றி சாம்பற்கார சத்து சுண்ணாம்பு தாதுவுள்ள நிலம் தென்னை யுண்டாகு மென்று கூறலாம்.

கருவடிவண்டல் சேர்ந்த நிலம், அடியில் கூழாங்கல் சிரிதும் பெரிதுமாக வமைந்திருந்தால் தென்னை யுண்டாமென்று மதிக்கலாம். இந்த நிலம் அவ்வளவு சிரேஷ்டமென்று கூறமுடியாது. விவசாயி இஷ்டப்படி எங்கும் நிலம் அமையவாசெய்யும். நீருத விஷயத்துக்கே உபயோகிக்கலா மென்று கூறநேர்ந்தது-

லோக்கல் பண்டு ரோட்டிருபுறமும் குளங்கரைகளில் (ஏரி எனவும் வழங்கும்) தென்னை யுண்டாகும். இவைகளின் பக்க நிலங்களில் தென்னை யுண்டாகாதிருக்கினும் குளங்கரை ரோட்டு போடமண் போட்டு மண் புலபுலப்பா யிருப்பதாலும் வடிகாலமைந்து நிலங்களின்குரை நீக்கி விடுவதாலும் தென்னை யுண்டாகிறது. இந்த நிலமையை நன்குய் ஊன்றி யோசிக்கின் தென்னைக்கி * வடிகால் அத்தியாவசிய மென்பது தெளிவாய் ரூபகாரப்படுத்தப்படுகிறது.

தென்னைக்கி உத்தேசிக்கும் புஞ்செய்கள் அவுரி கொழுஞ்சி செழுமையா யுண்டாகி கோடை காலம் செடி வாட்டமே கொடாமல் குளை செடி பசுமையாயிருக்குமானுல் அந்த நிலத்தில் தென்னையுண்டாவதி லாட்சேபனையில்லை. 4-5 அடிக்கு மண் கண்டமிருக்க வேண்டியதவசியம்.

செவ்வல் மிகுந்த மேல் குறித்த வடகரை பண்பொழி ராஜபாளையம் மலையடிவாரம் செவ்வல் புஞ்செய் தென்னந்தோட்டமும் செவ்வல் நில கிணற்றுப்பக்கம் சில தென்னை மரங்களிருந்து நன்குய் காய்ப்பதால் செவ்வல் தென்னைக்கி சிரேஷ்டமென்று வெளியாகிறது.

---

* கிருஷிகன் 10-ம் வால்யம் 186-ம் பக்கம் 21-ம் வரி, 1926-ம் வருட முதல் என்றது முதல் கீழ் பாகங்கள் வடிகால் வெட்டியதால் ஆரஞ்சு செழித்ததையும் பார்க்க.

தென்னைக்கு நிலந் தேர்ந்தெடுப்பதில் நன்றாயாலோசனை செய்து நிர்ணயிக்க வேண்டும். தாழ்ந்த நிலமாகில் உத்தேசித்த வரும்படி கிடையாமல் செலவு செய்த தொகையும் நஷ்டமாய் மனவருத்தந்தாங்க முடியாததாக சம்பவிக்கும்.

ஐரோப்பியர் எந்தப் பயிர் செய்யினும், குதிரை, மாடு, ஆடு, கோழி வளர்த்து விர்த்தி செய்யக் கருதினும் நிபுணத்துவமுள்ள சாஸ்திரிகளிடம் கலந்தாலோசித்தும் வேண்டிய புஸ்தகம் வாங்கிப் பார்த்துப் பரிசோதித்த பின்பே விருத்தி செய்வார்கள். நம்மிடம் அவ்வளவு பொறுமை விசாரணை கிடையாது.

காய் விளைவு கால நிர்ணயம்.

தென்னம்பாளை யுருவி மரத்தில் வெளியான பின் * $3\frac{1}{2}$ மாத முதல் $4\frac{5}{8}$-மாதம் வரை சென்று வெடிப்பதாக முன்னமே யறிவோம். பாளை முற்றி வெடித்தபின்பு புஷ்பங்களெல்லாம் ஒரே தடவலில்மலர்ந்து திறப்பதில்லை. 1 கொத்து மலரில் ஆண் மலர் வளர்ந்து அவை பூத்து வாடி விடுவதற்கு 15-நாளாகும். பின்பே பெண் மலர் திறக்கத் தடங்குகிறது. இந்த மலரும் வாட 15-நாளாகும். 1 கொத்து புஷ்பித்து முடிந்த பிறகு அடுத்த பாளை வெடிக்க ஆரம்பிவிக்கும். ஆதலின் 1 கொத்திலுள்ள ஆண் மலரும் பெண்மலரும் சேர்ந்து கருவோற்பத்தி யாவதரிதாகவே யிருக்கும்.

மேலும் ஒரே மரத்திலுள்ள 2 மலரும் அனேகமாய் சேறுதென்றே சொல்ல வேண்டும்.

மேலும் ஒரே மரத்திலுள்ள 2 மலர் சேறுமல் இதர மரங்களின் ஆண் மலர் மகரந்தமே பிரிதோர் மர பெண் மலரில் கலப்பதாக தெரிவிப்பதால் ஒரே மரத்திலுள்ள நெத்துகள் எல்லாம் ஒரே விதமான தென்னைகளாக வளருவதில்லை என்றும் தாய்மரக்காய் போல் காய்க்காதிருபபதும் ஆச்சரியமன்று.

தென்னை பருமர நெத்து பெரிடி மணியாவதும் பொடி மணி நெத்து பருமணியாவதும் செம்மரம் பச்சை மரமாகி பச்சையாகக்

---

*மரம விர்த்தியாய் காய்ப்பாரம்பவத்தவுடன் கூற வேண்டியதை இங்கே தெரிவிப்பதேனென்று நேயர்கள் வினவக்கூடும். விரை நெத்து பொருக்கு முறை தெரிவிக்க வேண்டியதால் முன்பே தெரிவிக்க நேர்ந்தது.

*கிருஷிகன் 10-வது வால்யம் 60-வது பக்கம் 3-ம்பாரு பார்க்க.

லாய்ப்பதும் பிரிதோர் மர ஆண் மலரால் கருவடைகிறதென்று தெளிவா யறியலாம்.

ஒட்டு கட்டி நல்ல ஜாதி தாய் மரம் போல் விர்த்தியாக்க முடியாத ஜாதிகளுக்கு 10—15 கண் வைத்து விர்த்தி செய்து வரும் பழக்கம் நிகழ்வது தாய் மரம் போல் 1-2 மரமாவது தேருமென்று அனுஷ்டிப்பதாகக் கூறலாம். முன்னோரனுசரணைப் பழக்கம் சாஸ்திர ஆராய்ச்சியால் தெளிவாய் விடுகிறது.

பாளை வெடித்து மகரந்தம் பெண் மலருடன் சேர்ந்து 168 நாளுக்குப் பிறகு தின்னக் கூடிய வழுக்கை யுண்டாக ஆரம்பவிப்பதாகவும் 224 நாட்களுக்குப் பின் சிரட்டை திண்ணமாகி வளுக்கை சிரட்டையுள் பூராவும் உண்டாவதாகவும் 308 நாட்களில் வழுக்கை தேங்காயாகத் திரண்டு நன்றாயுண்டாகி யிருப்பதாகவும் 364 நாளில் சிரட்டை முற்றி நெத்து நன்றாய் பழுத்திருப்பதாகவுஞ் சர்க்கார் பண்ணையாராய்ச்சியில் வெளியானதாக விவசாய இலாகா மதுரை 6-வது சர்க்கிள் டிப்டி டைரெக்டர் தெரிவிக்கிறார்.

மே, ஜூன் மாதங்களில் வெடிக்கிற பாளைகளில் அதிகமான காயுள்ள பெண் மலர் காணப்படுது. அதே மாதம் மரங்களில் அதிகமான பெண் மலர்கள் காயாகத் திரண்டு நெத்துகளு மிருக்கின்றன. டிசம்பர், ஜனவரி பெண் மலர் எண்ணிக்கை ரெம்பகுறைவு; நெத்துங் குறைவே.

பாளை யூடுருவி வெளியான காலம் முதலாக முற்றி வெடிக்கும் வரை மரத்திலிருந்து போதுமான உணவு கிடைக்க வேண்டும். கெர்ப்ப ஸ்திரி போஷணை ஜெனிக்கும் சிசு சம்பூர்ண உருவமாயமைவது போலும் சினைப்பசுவை போஷித்துவரின் பிறக்குங் கன்று திடகாத்திரமாயும் பால் சிறப்பு பசுவுக்கதிகரிக்கு மென்பது போலுமே.

பாளை உணவு கிடைப்பதுக்கு அக்டோபர் மாத முதல் டிசம்பர் மாதம் வரை கார்கால மழை யிருப்பதால் தென்னை புஷ்டியாய்த்தக்க உணவழிக்கிறது. உணவு திருப்தியா யடைந்த பாளை வெடிக்குங் கால நிர்ணயப்படி எப்ரல், மே, ஜூன் மாதங்களில் காய் ஜாஸ்தியா யிருப்பதும் செப்டம்பர், டிசம்பர் மாதம் பறிக்குங் காய்கள் குறைவதானது அந்தக் காயுற்பத்தியாகும் பாளை விளைவு காலம் வரட்சியா யிருப்பதே காரணமென்பதும் ஸ்பஷ்டமாய் வெளியாகிறதன்றோ?

மேல் சமுத்திரக் கரை பிரதேசமான திருவாங்கூர் ராஜ்ஜியம் கொல்லம் முதலிய பிரதேசங்களில் மே, ஜூன் மாதம் தென் மேற்கு

பருவமழை பெய்வதால் செப்டம்பர் டிசம்பர் மாத பறிகாய் ஜாஸ்தியா யிருப்பதும் பிந்திய பறிகாய் குறையுங் காரணம் பாளை விளைவு காரணம் மழை யில்லாததும் கீழ் கரை ஜில்லா நிலமையை ஸ்திரமாய் உருதிப்படுத்துவ தென்பதும் ரூபகாரப்படுத்தப்பட்டது. அங்கே ஆனி, ஆடி பறி கோடை குறையுமென்ற ஜனவசனம் கால ஸ்திதியை ருஜுவாக்கும்.

மழை யில்லாத பஞ்சக்காலம் சரியாய் காய்ப்பதும் பஞ்சந் தெழிந்த மறுவருடம் போதிய மழை பெய்தும் காய்ப்பு குன்றுவதை நேயர்கள் கவனித்திருக்கலாம். பாளை வெடிக்க 4⅝-மாதமும் பின் பெண் மலர் கருத்தரித்து காய் முற்ற 1 வருடமாவதால் காயுற்பத்திக்கு முந்தின வருட மழையே காரணமெனறும் இந்த வருடமழை அடுத்த வருடகாய்ப்புக்கேதுவாமென்று தெளிவாய் விளங்குகிறதன்றோ?

சர்க்கார் வவசாயப்பண்ணைகளில் உழவு சாகுபடி ஆரம்பம் பயிர் மத்யகால பருவம அருவடை காலம் வரை மழை யளவு, உழவு, சாகுபடி பருவம ஒவ்வொன்றும் புஸ்தகத்தில் பதத்து வருவதால் பயிர்களின் லாபலோப மெடுத்துப்பசி ரிப்போர்ட்டெழுத சௌகரியம் வாய்க்கிறது. நாமும் மழை யளவு உஷ்ண டிக்கிரி அப்பப்போ நடக்கும் பருவ ஸ்திதியை நோட் பதிந்துவரின் தென்னை காய்ப்பு ஜாஸ்தி கம்மியின் காரணந் தெரிந்து வேண்டிய திருத்தஞ்செய்ய வேதுவாம். ஒரு வருட மாத்தரம் பருவ குறிப்பு எழுதுவதும்போதாது. வருடந்தவறாது எழுதிவரின் பல் வருட சராசரி குறை முதலியவை வறிந்து திருந்த மார்க்கமாகும். மழை யளவு கருவி உஷ்ணமானி தெர்மாமிட்டர் 3-4 ரூபாய்க்குள் தயாரிக்கலாம். இன்னும் வரும்.

COCONUT ERRATA

தென்னை பிழை திருத்தம்.

கிருஷிகன் 10-வால்யம் 194-ம் பக்கம் 13-ம் வரிக்கு கீழாகவும் 14-ம்வரிக்கு மேலாக.

(னயில்பெறு முத்தலைச் சூலத்தரனுவன் யாவும் மறைத்தகளும் பான்மை) எனவும் அமைத்துக் கொள்க.

ஷை வால்யம் 194-ம பக்கம் 15-ம் வரியில் தேங்கா யுருவம் என்றதின் பின்

(சித்தாந்த சாஸ்திர கருத்துப்படி பஞ்ச கிருத்தியத்தை 3-ஆக அடக்கி கூறுவதும் மரபு) என்று அமைத்து பின் தேங்கா யோட்டில் என்றவாக்யம் தொடர்ந்து வாசிக்க வேண்டும்.

ஷை வால்யம் 194-ம் பக்கம் 7-வது பாரு 5-வது வரிக்கு கீழாக (அங்கே தோட்டங்களிலேயே வீடு கட்டி ஜனங்கள் வாசஞ் செய்கிறார்கள். 1 தோட்டத்து வீட்டுக்கும் அடுத்த தோட்ட ஜனங்களுக்கும் சப்தம் கேட்க மாட்டாது. வீடுகள் அடுத்தடுத்திரா. தெருக்கள் பெரும் பாதைகளாகவும் பாதையிரு புறமும் தோட்டமும் வீடுகளாகவிருக்கும்., இவ்வாறு மேல்கரை ஜில்லாவும் அதை யடுத்த திருவாங்கூர் கொச்சி ராஜ்ஜியமும் சிலோனும் கிருமாந்திர நிலைமையாகும். அங்கே டவுன்கைட் பட்டணங்கள் கீழ்கரை ஜில்லா போன்று வீதிகளும் இருமருங்கு வீடுகளாகவிருக்கும். இங்கேயுங்கூட வீடு பின் பாகம் தோட்டங்களும் மா,பிலா, தென்னை முதலிய விருக்ஷங்களில்லாத பாகம் ஏக தேசமா யிருக்கும். தோட்டத்தில் ஜனங்கள் வசிப்பதால் தோட்ட பருவங் கவனிக்க சௌகரியமா யிருக்கும். தேகாரோக்யங் குறைவிரு என்று அமைத்து பின் 6-வரி முதல் துடர்ந்து வாசிக்க வேண்டும்.

கிருஷிகன் 10ம் வால்யம் 196-ம் பக்கம் அடிக்குறிப்பு 2ம் அடித்து (கிருஷிகன 10 ம் வால்யம் 8-ம் பக்கம் சிலோன் தென்னை பயிர் விவரமும் கிருஷிகன் 5-ம் வால்யம் 107-ம் பக்கம் பிரேசில் தேச தென்னை பயிர் விவரமும்) என்று அமைத்துக் கொள்ள வேண்டும்.

வே. ப. திருமலையப்ப முதலியார்,
வெள்ளகால் போஸ்டு கஸ்பா,
திருநெல்வேலி ஜில்லா,

Correspondence
கடிதம்

அன்பார்ந்த ஐயா,

அனேக விக்ஞாபனம். கீழ்கண்ட சந்தேகத்தை விளக்கும் பொருட்டு தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். பதில் கிடைக்கும் பொருட்டு இதில் ஒரு அணு கவர் விலாசமிட்டு வைத்திருக்கிறேன்.

சில இடங்களில் தென்னை மரங்கள் நன்றாக வளர்ந்து வந்தும் காய் பிடிக்காமல் உதிர்ந்து போகின்றன. முதலாவது கணியனூர் என்ற என்னுடைய கிராமத்திலுள்ள சில மரங்கள் இம்மாதிரி பலமில்லாயவிருக்கின்றன. இப்போது நான் பயிர் செய்திருக்கும் தென்னாற்காடு ஜில்லாவில் மதியனூர் என்ற கிராமத்து சுந்தவனத்திலுள்ள மரங்களும் இப்படியே பூவிட்டு குரும்பு பிடித்து பின் உதிர்ந்து விடுகின்றன.

இப்போது கணியனூரில் நான் சில தென்னைகள் வைத்திருக்கிறேன். ஆகையால்தான் ஆரம்பத்திலேயே தங்களிடம் இதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

தயவு செய்து இந்த லெட்டருக்கு சீக்கிரத்தில் பதிலளிக்கவும்.

A. S. சுப்பையர்,

பதில்

நேரில் வந்து பார்க்காமல் பதிலளிப்பது ஓர் நோயாளியை நேரில் பார்க்காமல் வைத்தியம் செய்வது போலாகுமாதலாலும் அவ்வாறு சொல்வதில் பலதவறுதல்கள் ஏற்பட ஹேதுவுண்டாகுமாதலாலும் நாம் நேரில்பார்க்காமல் நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க சாத்தியமாகாது. தங்கள் இலாகா அதாவது (St. Thomas Mount.) பரங்கிமலையிலிருக்கும் 4 வது விவசாய டெப்டி டைரெக்டரவர்களுக்கு எழுதினால் அவர்கள் நேரிலாவது அல்லது அவர்கள் கீழுள்ள உத்யோகஸ்தர்களை அனுப்பியாவது இனமாய் ஆலோசனைகள் சொல்லுவார்கள்.

மேற்படி ஆலோசனைகள் அறிய விரும்பினால் இவ்வருஷத் கிருஷிகன் பத்திரிகைகளைப் படித்தால் தெரியவரும்-

நாமே நேரில்வந்து பார்த்து நமது அபிப்பிராயம் அறியவிரும்பினால் இரண்டாவது வகுப்பு ரெயில் சார்ஜும் படிச்செலவும் அனுப்பினால் நமக்கு சௌகரியப்பட்டபோது வந்து பார்த்து அபிப்பிராயம் கொடுக்க முடியும்.

ப. ர்.

கோட்டூர்
பாளையங்கோட்டை.

கனம் ஐயா! கிருஷிகன் பத்திராதிபரவர்களுக்கு 1699-ம் செ. சந்தாதாரர் இசைக்கியாடும் பெருமாள் பிள்ளை விஞ்ஞாபனம்:—

1 இவடம் எனது நஞ்சையில் சென்ற ஆனி மீ கரும்பு நடப்பட்டு இப்பொழுது வயது 6-மாதம் ஆகிறது அது தின் கரும்புக் கென்று பயிரிடப்பட்டபடியால் விற்பனைக்கு யோக்கியமான காலமாகிறது. மார்கழி மீ 30உக்குள் அதாவது 7-மாதத்திற்குள் கரும்புகளை வெட்டி விற்கப்படும்.

2 அதன் மேல் மேற்படி கரும்புப் புதர்களை வளர விட்டும், வெட்டிக் கொத்தி உரமிட்டும் இரண்டாவதடியாக வளரவிட்டு மறுபடியும் அடுத்த மார்கழி மீ வெட்டி விற்கலாம் என யோசிக்கிறேன்,

3 ஆனால் அவ்வித கரும்பு பருமனையிராதென்றும், மிகவும் கடினமாயிருக்குமாதலால் விலை மேவாதென்றும் அதனால் கஷ்டமுண்டாகக் கூடுமெனவும் ஜனங்கள் கூறுகின்றார்கள்.

4 இதில் உரமிடுதலால் நற்பயிரை யுண்டாக்கியும், கரும்பை 10மீ வரை முதிர்ச்சிக்கு விடாமல், உத்தேசம் 7 மாசத்துக்குள்ள பெரிய கரும்புகளை அப்போதைக்கப்போது வெட்டி விற்பதினால் கரும்பின் கடினபாவத்தைப் போக்கியும், முயற்சி செய்யில் முதலாவதடிபோல் நல்லாபம் அடைய முடியாதென்று சிலர் கூறுகின்றனர்.

5 இதில் தங்களுக்கு அனுபவ மிருக்கலாமென நினைத்து தங்களுக்கு எழுதலானேன். தங்களபிப்பிராயந் தெரிந்து வேறு பயிரிட உத்தேசிக்க

வேண்டியிருத்தலின் மேற்கண்ட சங்கைகட்கு சமாதானம் மார்கழிக் கிருஷிகனில் கிடைக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

6 இரண்டாவதடி கூடமேல் நெருங்கி யிருக்கும் கரும்புத்தூர்களை எடுத்து கலப்புற்ற இடங்களில் நடலாமா? அல்லது கரணைகள் தான் பதிக்க வேண்டுமா? உரம் செய்நேர்த்தி இவைகளைப் பற்றியும் சுருக்கமாய் அறிவிக்க விருப்பம்.

இசைக்கியாடும் பெருமாள் பிள்ளை.

பதில்

1 ஏழாவது மாசத்தில் கரும்பை வெட்டினால் சரியாய் முற்றாதாதலால் போதுமான தித்திப்பைக் கொடுக்காதென்பது எமது அபிப்பிராயம். குறைந்தது 10-வது மாதத்திலாவது தான் வெட்ட வேண்டும். தாங்கள் நட்ட கரும்பு தினுசு என்னவென்றே எழுதவில்லை. இன்ன தினுசென்று எழுதினால் மற்ற விவரங்கள் திட்டமாய்க் கூற முடியும்.

2 இரண்டாவதடிக் கரும்பை வளர விட்டால் சாதாரணமாய் உயரத்தில் குறையுமே யல்லாது கனத்தில் குறையாது. அந்தந்த தினுசின் இயற்கைக் கடின சக்திக்கு அதிகக் கடினமாகுமென்று சொல்வதும் சரியல்ல.

3 வளர்த்தி குறைவதால் விலை சற்று குறையலாம்.

4 கரும்பு வெட்டிய உடனேயே சரியானபடி கொத்தி எரு விட்டு தண்ணீர் கட்டி வந்தால் எறக்குறைய முன் அளவு உயரத்திற்குக் கொண்டு வரக்கூடும். அப்போதும் 7 மாதத்தில் வெட்டினால் சரியான தித்திப்பு கொடுக்காதென்றே நினைக்கிறோம். சில இடங்களில் ஒரு தரத்திற்கு மேல் பட்டும் இவ்வாறு மறுதாம்புக் கரும்புகளை வளர விடுகிறார்கள். ஆனால் அவ்வாறு செய்வதில் நோய் உண்டாகுமாதலால் இலாபகரமாயிராது.

5 இரண்டாவதடியாக நெருங்கி யிருக்கும் கரும்புகளை அப்புறப்படுத்தி நட்டால் களை வெட்டல், ஜலம் பாய்ச்சல் எருவிடுதல் முதலியவைகளில் ஒன்றுக்கொன்று ஒவ்வாதாதலால் சரிப்பட்டு வராதென்றே நினைக்கிறோம்.

ப. ர.

சாணூன் குப்பம்
28—11—27.

ஐயா,

1. எலுமிச்சஞ் செடி ஒட்டுச் செடி நடுவது நல்லதா? நாற்று நடுவது நல்லதா? இவைகள் எங்கு என்ன விலைக்குக் கிடைக்கும்.

2. எத்தனை அடிக்கொரு செடி வைக்கலாம்.

3. கிருஷிகன் 1 முதல் 8 வரை வாலியங்களில் சில பிரதிகள் கைதவறிவிட்டிருக்கின்றன. அவைகள் இப்போது அனுப்ப முடியுமா?

வி. முருகேச முதலியார்.

பதில்

1. நட்டுச் செடிகளை நட்டால் செடிகள் நீடித்து காய்க்காமல் பட்டுப்போகும். ஆனால் ஜல்தியாய்க் காய்க்க ஆரம்பிக்கும். நாற்று விட்டு நடும் செடிகள் காய்க்க ஆரம்பிக்க 4 அல்லது 5 வருஷம் பிடிக்கும். ஆனால் அது முதல் பல வருஷங்களுக்கு நீடித்துக் காய்க்கும். ஒட்டுச் செடிகள் ஜல்தியில் காய்த்தாலும் பெரிய செடிகளாக 4 5 வருஷங்கள் பிடிக்குமாதலால் அதற்கு முன் காய்க்கும் காய்கள் கொஞ்சமாகவே இருக்கும். ஆகையால் எமது அபிப்பிராயத்தில் நாற்றுவிட்டு நடுவதே நலம். ஒட்டுச் செடிகள் எம்பையர் நர்ஸரி ஸீட்ஸ்டோர்ஸ், லால்பாக் போர்ட் ரோட் பெங்களூர் ஸிடி என்பவர்களிடமாவது, தேவப்பாபிரதர்ஸ் விதை நாற்று வியாபாரிகள் லால்பாக் போர்ட் ரோட் பெங்களூர் ஸிடி என்பவர்களிடமாவது, எம். ஒபலப்பா பிரதர்ஸ் நாற்று வியாபாரிகள் பசுவன்குடி போஸ்ட் பெங்களூர் என்ற விலாசத்தாரிடமாவது பெறலாம். செடி 1க்கு 8 அணா முதல் 12 அணா வரை விலையிருக்கும். பாக்கிங், ரயில் சார்ஜ் முதலியன வேறு ஆகும். விதைகள் நாத்து விட்டு நட உத்தேசித்தால் நல்ல ஜாதிப் பழங்கள் நம்மிடம் அகப்படும்.

2. 15 முதல் 20 அடிக்கொரு செடியாக மண் வளத்திற்குத் தக்கபடி நடலாம்,

3. கிருஷிகன், 1 முதல் 8 ம் வால்யூம் வரை அகப்படாது. ப. ர.

அன்பார்ந்த ஐயா,

தங்களால் பிரசுரிக்கப்படும் கிருஷிகன் மூலமாக விவசாய சம்பந்தமாயுள்ள பல விஷயங்களையும் சாஸ்திரீய மூலமாயுணர்ந்த தங்கள் உதவியையும் அறிந்து கொண்டு வருகிறேன். விவசாயத்தில் தேர்ச்சி யடையாத பல விவசாயிகளினுடைய சந்தேகங்களையும் நிவர்த்தி செய்வதைப்பற்றி அதிக சந்தோஷ மடைகிறேன்.

பயிர் நோவுகளில் கொக்கு நோவு என்பது என்ன? அது எந்தக் காலத்தில் எந்த விதமான பயிர்களுக்கு ஏற்படுகிறது? அதனால் பயிர்களுக்கு எவ்விதமான கெடுதல் உண்டாகிறது? அவ்விதமான நோய் வாராமலிருப்பதற்கும், வந்த பிறகு அதை நிவர்த்தி செய்வதற்கும் ஏதாவது மார்க்கம் உண்டா? என்பதைத் தாங்கள் விபரமாகத் தெரிவிக்கும்படி கோருகிறேன்.

நஞ்சைகளில் உற்பத்தியாகும் களைகள் பலவிதமிருப்பினும் அவைகள் நெல் பயிருக்கு பலவித கெடுதி செய்யினும் ஆலக்கொடி என்னும் களையானது இராட்சசக் களையாயிருக்கிறது. ஒரு வயலில் விரை முதலுக்கு ஒரு சிறிய கொடி இருப்பின் அது வெகு சீக்கிரத்தில் அந்த வயல் முழுவதும் பரவிவிடுகிறது.

சற்று எருக் கட்டாயிருக்கும் நிலங்களில் அது வெகு உற்சாகமாகக் கிளம்புகிறது. சுமார் ஜலம் விட்டு 20 தினத்திற்குள் எப்படி தாமதச்சி

குளத்தில் ஜலம் தெரியாது தாமரைக் கொடி படருகிறதோ அதுபோல கீழ் மண் தெரியாது செழுமையால் கிளம்பி பூமியில் கொட்டிய எருவின் பெரும் பாகத்தை கிரகித்து விடுகிறது.

இக்கொடிக்கு இலைக்கு இலை கணுவும் கணுவுக்குக்கணு வேரும் ஊன்றுகிறது. ஆகவேகொடி ஓடும் இடமெல்லாம் நிரந்தரமாக வேர்ஊன்றுகிறது. எந்தவிதத்திலும் இக்களையை சுத்தமாகப் போக்குவது அசாத்தியமாயிருக்கிறது. இக்கொடி மிகவும் மெல்லினமா யிருப்பதால் கையினால் அரித்தாலும் அக்கொடி அறுந்து போய் பூமியில் தங்கி மறுபடி வேர் ஊன்றிக்களை உற்பத்தியாகிறது. பூமியில் சேகரித்திருக்கும் எருவை அதிதீவிரமாய் கிரகிப்பதுடன் நில்லாமல் இக்கொடி முதல்முதலாய் நட்டிருக்கும் நெற்பயிரை நான்குபக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு முதல் பிரிந்து குலைகள் கட்டாதபடி தடுக்கிறது. எப்படி ஓர் மனிதனை சிறையிலிட்டு அவனுடை ஜீவாதாரத்திற்கு வேண்டிய உணவையும் வரவரக் குறைத்து விட்டால், அவன் உடல் மெலிந்து பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு கடைசியில் உயிர் துறப்பானோ அதுபோலவே அதிக ஆலக்கொடி படர்ந்த நிலத்தை எவ்வளவு சிரமப்பட்டு சுத்தமாக அரித்தாலும் நட்ட பிறகு பயிர் பச்சை கொண்டு தூர் கட்டி முன்னர் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து பயிருணவையும் கிரகித்துக் கொண்டு கிளை கட்டாமலிருப்பதினால் நட்டமுதல் அப்படியேநின்று புலனைமடைந்து கடைசியில் கதிர்விடாமல் வைக்கோலாகி விடுகிறது. அல்லது மிக்க கேவலமானகதிரை வெளியிடுகிறது.

இத்தகைய கொடிய செய்கையுள்ள களை வேறொன்றும் இப்பிராந்தியத்தில் இருக்கு மென்று தெரியவில்லை. இச்சத்துருவை அறவெல்ல ஏதாவது உபாய மிருப்பின் அதைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

கிருஷிகன் 9 வது வாலியம் 5 வது பிரதி 159 வது பக்கத்தில் கமத்தொழில் விளக்க மென்னும் பத்திரிகையைப்பற்றி கூறியிருக்கிறது." அது எந்த பாஷையில் பதிப்பிக்கப்படுகிற தென்றும், சந்தா, அகப்படும் இடத்தையும் அறிவிக்கவேணும்.

தங்கள் அன்பிற்குறிய

நெல்லையப்ப முதலியார்.

பதில்

ஐயா,

பயிர்களில் உண்டாகும் நோய் கொடிகளுக்கு அந்தந்த பிராந்தியங்களில் பெயர்கள் ஒரே நோய்க்கு வெவ்வேறாய் வழங்கப்படுகிறது. ஆகையால் நிருப நேயர் குறிக்கும் நோயால் பீடிக்கப்பட்ட பயிரை நோய் தாக்கிய புழு பூச்சிகளுடன் கோயம்புத்தூர் விவசாய காலேஜிலிருக்கும் பூச்சி சாஸ்திரி நிபுணர் அவர்களுக்கு விவசாய பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் பிரகாரம் அனுப்பினால் அவர்கள் அவ்விஷயத்தை குறித்து விபரம் தெரிவிப்பார்.

இதே மாதிரி நஞ்சைகளில் உற்பத்தியாகிறதாய் சொல்லும் ஆலத் கொடியின் மாதிரி கொடியை இங்கி, ஊரும் கடுதாசிகளுக்கு மத்தியில் வைத்து தபால் மூலியமாய் கோயம்புத்தூரிலிருக்கும் கவர்ண்மெண்டு தாவர சாஸ்திரி நிபுணர் அவர்களுக்கு அனுப்பினால் அவர்கள் அந்தச் செடியின் ஜீவிய சரித்திரத்தைக் குறித்த ஆராய்ந்து பார்த்து அதை எந்த விதம் பரவாமல் தடுக்கலாமென்னும் யோசனை கூறுவார்.

நிருப நேயர் குறிக்கும் குணங்களுடைய செடிகள் நஞ்சைகளில் அனேகம் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களுடன் அழைக்கப்படுகிறது. ஆகையால் நிருப நேயர் குறிக்கும் கொடி எதுதானென்று நிர்ணயமாய் தெரியாதவரை சரியான ஜவாபு எழுத வருத்தப்படும்.

கிருஷிகன் 6-ம் வால்யம் 5-வது பிரதியில் 159-வது பக்கத்தில் கூறியிருக்கும் கமத்தொழில் விளக்கம் என்பது இலங்கை விவசாய டிபார்டுமெண்டாரின் அனுமதியின் பேரில் பிரசுரமாகும் ஒரு மாதாந்தர விவசாயத்தமிழ்ப்பத்திரிகை. அதன் வருஷசந்தா 50 சதம் பத்திரிகை வேண்டுமானால் பத்திராதிபர் எச். குக், செல்லப்பா (Vaddukkoddai Ceylon) வடுக்கோட்டை சிலோன் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

கொக்கு நோவு என்னும் வியாதி எனக்குத் தெரிந்த மட்டில் நெல் பயிரை பிடிக்கும் ஒருவித புழுவுக்குச் சொல்வதுண்டு. புழுக்கள் இலைகளை துண்டுகளாகும்படி கிழித்து வெட்டி அந்த நெல் பயிரின் இலைகளிலேயே ஓர்வித கூடுகட்டிக் கொண்டு ஜீவித்து தளையை நாசமாக்கும். நிருப நேயர் குறிக்கும் கொக்கு நோவு இதுதானென்றால் இதற்கு சிகிச்சை பின்வரும் பிரகாரம் செய்யலாம்.—

நோய் தாக்கியிருக்கும் வயலில் தண்ணீர் நிரம்பக்கட்டி ஒரு முள்படல் போல ஒரு படல்கட்டி அதைப் பயிரின் மேல் இழுத்துக் கொண்டு போனால் பயிரின் மேல் கட்டியிருக்கும் புழுக்கூண்டுகளும் புழுக்களும் தண்ணீரில் விழுந்து விடும். உடனே அவ்வயலின் தண்ணீரை வெளியே வடியவிட்டு விட வேண்டும். இப்படி செய்தால் புழுவின் பாதை குறைந்துவிடும். இத்துடன் கொஞ்சம் கிரோசின் எண்ணெ அதாவது மண் எண்ணெயை வயலின் தண்ணீர் மேல் பரப்பில் கலக்கும்படி தெளித்து விட்டாலும் கூடுகளிலிருக்கும் புழுக்கள் செத்துப்போகும். நிருப நேயர் குறிக்கும் நஞ்சையில் உற்பத்தியாகும் ஆலக்கொடி என்பது ஒரு வேளை இஜ்ஜில்லாவில் சொல்லும் வெக்காதச்செடியா யிருந்தாலும் இருக்கலாம். அல்லது ஆனைக்கீரையா யிருந்தாலு மிருக்கலாம். திட்டமாய் இன்னதுதானென்று தெரியாமல் பதில் எழுத முடியாது.

பு. ர்.

அன்பார்ந்த ஐயா,

கனமிக்க ஸ்ரீமான் ஜெ. செல்வரங்க ராஜா வேந்த கல்வி பெருக்கும் ராஜாவர்களின் திவ்ய சமூகத்திற்கு கிருஷிக போஷகரின் சுசிகா யோஜனை

மிர்த பாக்யம் வாழ்க ஆரம்பமான கிருஷிப் பிரியன் அறிவுருச்சிறியன் ஜமால் செய்யது முகம்மது சாஹிபு மனமார்ந்த அனந்தானந்த வந்தனந் தந்தனன்.

ஜெகந்நாதனருளால், ஜெகத்துக்காதாரமான ஆகாரவசதிகளுக்கு மாதாரமான கிருஷிக் கல்வியைக் கைம்மாறெதிர் நோக்காது நந்தமிழுலகினுக்கு தாங்களுவப்புடன் ஊட்டிவரும் பரோபகாரத்திற்குப் பிரதியுபகாரமாக இத் தமிழுலகம் யாது செய்தால் நிகர்!

அறிவே ஸ்வரூபியான பரம்பொருள் தனது நிஜஸ்வரூபமான மெய்யறிவை தங்களில் மிகமிகப் பிரகாசிக்கச் செய்தருளுமாக

நிகரற்ற கிருஷியின் கலைகற்ற புத்திரர்களைப் பெற்று நீடூழி வாழுமாக அதனாலுலகம் மிகமிகச் செழித்தோங்குமாக.

இப்பத்திரிகை யான் பார்வையிட்டது முதல் இப்பத்திரிகைக்கு என்முற்றூர் உறவினர் வகுரற்றுறவினராகச் சகலருமே சந்தாதாரராகச் சேர வேண்டுமென்ற அவா என்னுள்ளத்துள் நிறைந்திருக்கின் பரிபூரணப் பொருளைப் பூரணமாக்கி அருளுமாக.

நாங்கள் வழக்கமாக 150-செண்டு நிலங்களை நெல் பயிர் நடுவதற்கு 15 செண்டு நிலங்களில் சுமார் 75, 80-பட்டணம் படி விதை நாற்றுப்பாவி நடுவது வழக்கம். ஆனால் இச் சேடையில அம்முறையை மாற்றி மேற்படி 15 செண்டு நாற்றங்காலில் 12படி மட்டும் கலப்பாக நாற்றுப்பாவி அத்துடன் சற்று ஹார்ன் ஹூப் மீல (கொம்பு குளம்பு சீவல்) என்ற உரத்தையும், சூப்பர்பாஸ்பேட் என்ற உரத்தையும் மேலே தூவியதில் நாற்றுச் செழிப்பாய்ப் படர்ந்து வளர்ந்தது. 40-ம் தினம் பிடுங்கி ஒற்றை நெல்லாக நட்டதால் மேற்படி 150 செண்டு நிலங்கள் பூராவும் நடவாகி மீதியும் சற்று கிடைத்தது. அதிக விதைவிட்டு நெருங்கப்பாவி நடுவதில் நட்ட பின் சீக்கிரமாக தளிர் விடுவதில்லை. தண்ணீர் கட்டு ஏற்பட்டால் மூடுகள் அழுக ஆரம்பித்தும் வெயில் அடித்தால் நண்டுப்பாரை வெட்டும். ஆனால் விதை சலசாய்ப் பாவி ஒற்றை நெல்லாக நட்டதில் அவ்வித அவகுணங்கள் ஏதுமின்றி பயிரும் உடனே துளிர்த்து மூடுகட்டி செழிப்பாக வளர்வதாகத் தெரிகிறது.

ஆனால் இம்முறையில் நாற்று வீரியமாய் வேரோடி சடைத்து வளர்ந்திருந்ததால் நாற்றங்காலில் நாற்று பிடுங்க சிரமம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதற்கு காரணத்தையும் பரிகாரத்தையும் சிரமம் பாராட்டாது தெரிவித்தருள வேண்டும்.

தங்களன்புக்குரிய,

ஜாமால் செய்யது முகம்மது.

பதில்

நெல் நாற்று பாவுவதில் விதையை கலப்பாய் பாவினால் அதன் வேர்கள் நெருக்கமாய் பாவுவதைவிட சற்று ஜாஸ்தி ஆழத்தில் பாவுமென்பது வாஸ்தவம் தான். ஆனால் இந்நாற்றை புழுதியில் பாவினால் அவ்வளவு ஆழம் போவதில்லை. மேலும் சேற்றில் பாவினாலும் நாற்று பாவின பின் சாம்பல் மூட்டம் போட்டால் வேர்கள் ஆழத்தில் போனாலும் நாற்று பிடுங்கும்போது மேலசாய் வந்து விடுவது அனுபோகத்தில் தெரிந்த விஷயம். நாற்று பிடுங்குவதில் சற்று சிரமம் ஏற்பட்டால் ஒன்றிரண்டு ஆள்கள் ஜாஸ்தி நாற்று பிடுங்கும் வேலையில் சென்றாலும் அதினால் பின்னாலுண்டாகும் அநேக நன்மையை உத்தேசித்து இந்த சிரமத்தை கவனிக்காமலே யிருக்கலாம். [illegible]

தெரிந்தவரை நாற்றங்காலுக்கு தழை எருவும் சாம்பலும் உபயோகிக்கும் பக்ஷத்தில் இந்த சிரமம்குறையும். ஹார்ன், ஹாப்மீல், சூப்பர்பாஸ்பேட், உரங்களை அப்பால் நடும் வயலில் போட்டால் நலம். 40 நாள்களில் நாற்று வயலில் வளரும் தினுசு நெல் நாற்றுக்கு சாதாரணமாய் எருக்கிலை, கொழுஞ்சி பூவரசு முதலிய தழைகளை மிதித்து மக்க வைத்து அதில் நெல் நாத்துப் பாவி அதன்மேல் சாம்பல் மூட்டுபோட்டு நாத்து வளர்த்தால் போதுமான தென்பது எமது அபிப்பிராயம். ப. ர.

ம-ா-ா-ஸ்ரீ கிருஷிகன் பத்திராதிபவர் அவர்களுக்கு பொற்பந்தல் 1696 நெம்பர் சந்தாதார் கண்ணப்ப முதலியார் எழுதிக்கொண்டது. தாங்கள் வெளியிடும் கிருஷிகன் பத்திரிகையில் ஈருள்ளி விஷயமாக எழுதியிருப்பதைப்பார்த்து அதன் பிரகாரம் செய்யலாமென்று அபிப்பிராயம். ஆகையால் சிறுவெங்காய விரை 10 செண்டுக்கு தேவையாயிருப்பதால் தங்கள் மூலியமாய் விரையை வரவழைத்துக்கொடுக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். விரையை எனக்கு வி. பி. மூலமாய் அனுப்பி தபால் சார்ஜிஉள்பட கட்டுவதற்கு ஆஜராய் இருக்கிறேன். அல்லது எனக்கு உடனே தெரிவித்தால் முன்பணமாவது அனுப்புகிறேன். கூடிய சீக்கிரத்தில் விரையை வரவழைத்துக் கொடுக்கவேண்டிய கடமை தங்கள் தயவுதான். கிருஷிகன் பத்திரிகைக்கு அநேக வந்தனம். கீழ் எழுதும் விஷயத்தை கார்த்திகை மாதத்து பத்திரிகையில் எழுத வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

போது அறிவிப்பு

கிருஷிகன் சந்தாதாரர்களாகிய அன்பர்களே! நம்மவர்களுடைய உபகாரத்தை எதிர்பாராமல் கிருஷிகன் விஷயமாக உபகாரம் செய்வதற்கு எல்லாவல்ல இறைவனை தொழுவோமாக. ஷை பத்திரிகை சந்தாதார்கள் யாவரும் பத்திராதிபரை சமயம் நேர்ந்தபோது பார்க்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் ஷை யாரை நேரில்பார்த்து சகல சந்தேகங்களையும் நிவர்த்திபாக்கிக் கொண்டேன். அவருடைய அன்பும் என்னால் அளவிட்டு சொல்ல முடியாது.

இப்படிக்கு,
கண்ணப்ப முதலியார்.

பதில்

சிரு வெங்காய விதை 10 செண்டுக்கு போதுமான அளவு வி. பி. யில் தங்கள் விலாசத்துக்கு சீக்கிரம் அனுப்பிவிக்கும்படி 4வது சர்கில் டிப்டி டைரெக்டர் அவர்களுக்கும் மற்றும் எனது நண்பர்களில் ஒருவருக்கும் எழுதியிருக்கிறது; வந்த உடன் அனுப்பப்படும். ப. ர.

"கிருஷிகன்" பத்திராதிபர் அவர்களுக்கு

அன்புமிக்க ஐயா!

அநேக வந்தனம். காலமழைகள் பெய்யாததாலும் இரண்டு வருஷங்களாக ஏரிக்கு ஜலம் வராததாலும் இங்கு அதிக கஷ்டப்படுகிறோம். கிணறுகளில் இறைத்து சாத்தியமானவரை சாகுபடி செய்வதென்றால் கிணறுகளிலும் போதுமானஜலம் கிடைப்பதில்லை. இக்கிராமம் மலையை அடுத்துள்ளது.

ணறுகள் வெட்டினல் பெருப்பாலும் பாறைகள் வராமலிருந்தது. அவற்றில் சொற்ப ஜெலம் கிடைத்தும் கிடைக்காமலுமிருக்கிறது. சில கிணறுகள் 7,8 கஜ ஆழம் வெட்டியும் உறுதியான கட்டுள்ளதாய் போதுமான தண்ணீர் அகப்படாமல் ஏரிகிரம்பினல் ஜலம் கிடைத்தும் ஏரிவரண்டுவிடின் கிணற்றில் ஜலம் வரண்டும் விடுகிறது. இவற்றில் ஏராளமான ஜலம் கிடைக்கும்படி செய்து கொள்வதற்கு வழிபரியாகிருக்தோம். கிருஷிகன் "ஐப்பசி மீத்திய சஞ்சிகையைப் பார்த்ததில்" பாதாள கங்கையை குழாய்கள் இறக்கி அதன் மூலமாய் வெளிக்கு கொண்டு வரலாமென ஏற்படுகிறது.

(1) பாதாள கங்கை என்பது எது? மேற்சொன்ன மாதிரி கிணறுகளில் பாறை அல்லது கட்டை துளைத்து அதன் கீழிருந்து கொண்டுவரப்படும் பேரூற்று அல்லது இப்போது கிடைக்கும் சொற்ப ஜலந்தானு என்பதை விவரமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(2) யந்திரசக்தியால் குழாய்கள் இறக்கும் யந்திரம் கிணறுகளில் விழும் பாறைகளைத் துளைத்து விடுமா? துளைப்பதாயின் எத்தனைஅடி துளைக்கக்கூடும். அதற்கு ஏற்படக்கூடிய சிலவினங்களின் விவரம்யாது?

(3) இவ்விடத்திற்கு நேரில்வந்து பார்த்து பாதாள கங்கை கிடைக்கும் கிடைக்காதென்று சொல்லக் கூடுமா? அப்படி சொல்லக்கூடியவர்கள் யாரென்பதை தெரிவிக்கவேணும். வந்துபார்ப்பதாக விருந்தால் சிலவின மென்னவாகும் என்பதும் தெரிவிக்கவேணும்.

தங்களது பதிலை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறேன். பதிலுக்கு ஒரு அணுஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் விவரமான பதில் தெரிவிக்கவேண்டுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்புக் குரிய.
கிருஷிகன் சந்தாதார்

பதில்

(1) பாதாள கங்கை பென்பது கிணறுகளில் மேல் பாகத்தில் ஊறும் ஜலமல்ல. ஆறுகள் மேலே ஓடுவது போல் பல காரணங்களால் பூமிக்குள் ஊறிக்கட்டி யிருக்கும் ஜலத்திற்கும் பூமிக்குள் ஓடும் ஜலத்திற்கும் பேர். பாதாள கங்கை அகப்பட்டால் இடத்திற்கேற்றபடி அமோகமான தண்ணீர் அகப்படும். இன்ஜின் வைத்து இறைப்பதற்குப் போதிய தண்ணீர் அகப்பட்டால் தான் பாதாள கங்கை தென்பட்டதாகச் சொல்லலாம்.

(2) பாறைகளைக்கூடத் துளைத்துச் செல்லும். ஆனல் பாறைகளின் கடினத்திற்கும் இலேசத் தன்மைக்கும் தக்கபடி செலவு அதிகமும் குறைவும் ஆகும்,

(3) இண்டஸ்ட்ரியல் இன்ஜினீர், சேபாக், மௌண்ட் ரோட் போஸ்ட், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதினல் அவர்கள் மற்ற விவரங்கள் தெரிவிப்பார்கள்.
ப. ர.

NEWS & NOTES

குறிப்புகள்

10ம் வாலியம் 6ம் பிரதியில் அதாவது கிருஷிகன் புரட்டாசி மாதக் குறிப்புகளில் விவசாய இலாகாவில் போதிக்கும் பொருட்டு, காக்ஷிப்படங்களுடன் உபன்யாசங்கள் நடைபெறுவதற்காக ஈஸ்டன் பெங்கால் ஸ்டேட் ரெயில்வே அதிகாரிகளின் பிரேரேபனைபின்பேரில் காருண்ய கவர்ண்மெண்டார் விவசாய நிருபண ரெயில் வண்டிகள் அமைத்து உபன்யாசங்கள் நடத்தியிருக்கிறார்களென்று எழுதியிருப்பது ஞாபகமிருக்கும்.

சினிமாக்களில் வெவ்வேறு வித காக்ஷிப்படங்கள் காட்டப் படுவதைப் போல் விவசாய அபிவிருத்தி சம்மந்தமான காக்ஷிப்படங்களை விவசாய நிருபண ரெயில் வண்டிகளில் காட்டி வருவதில் ஜி. ஐ. பி, ரெயில்வே தான் முதல் முதல் ஏற்பாடு செய்ததென்ற போதிலும் தற்காலம் அனேக ஸ்டேட்டுக்களும் இவ்வகை விவசாய அபிவிருத்தி ஏற்பாடுகளைக் கையாடி வருகிறார்கள். இதுவரை காக்ஷிப்படங்கள் விவசாய இந்தியாவில் கரும்பு சாகுபடியைக் குறித்தவை 3226 அடி நீளமுள்ள படங்கள் அடங்கினதென்றும், இந்தியா கோழிகள் அபிவிருத்தி விஷயப்படங்களின் நீளம் 1620 அடி நீளமுள்ளதென்றும், இந்திய கால்நடை அபிவிருத்தியைக் குறித்தப்படங்களின் நீளம் 2420 அடி நீளமுள்ளதென்றும், இந்திய பருக்கி சாகுபடியைக் காட்டும் படங்களின் நீளம் 3000 அடி யென்றும் பம்பாயிலும் டெக்கான் மாகாணத்திலும் நீர்பாசன சம்மந்தமான விஷயத்தைக் காட்டும் படங்களின் நீளம் 2500 அடிகள் யென்றும் தெரிகிறது. இன்னும் கோதுமை சாகுபடியைக் குறித்தும் பருத்தி சாகுபடியைக் குறித்த படங்களில் நிலத்தை உழுது பண்படுத்த ஆங்காங்கு உபயோகிக்கும் கருவிகளைக் காட்டுவதுடன், விதைப்புசம்மந்தமான சாதனங்கள் விதைத்தபின் பயிர்களை பராமரித்தல் அருவடை சம்மந்தமான விஷயங்கள் முதலியவைகளும் காட்டுகிறதாம். இதில் சாஸ்திர சம்மந்தமாய் அனுசரித்தவர்கள் பயிரிருக்கும் நிலமையையும் பழய புராதின வளக்கத்தில் பயிரிடும் பயிரின் நிலமையிலுள்ள வித்தியாசம் பயிர் ஆரம்பம் முதல் அறுவடையாகும்வரை நன்றாய் வெளிப்படுத்துகிறதாம்.

போதுமான அளவு பச்சை தீவனம் அதாவது கீரைத் தினுசுகள், வெங்காயத்தாள் முதலியவைகள் முட்டையிடும் கோழிகளுக்கு தீவனமாய்க் கொடுக்கா விட்டால் அக்கோழிகளிடும் முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சள் கரு வெளுத்தாப் போலிருக்குமாம். அதற்காக அறிந்த கீரை, வெங்காயத்தாள் முதலிய பச்சை தீவனம் அன்னாடம் கோழித் தீவனத்துடன் கொடுக்க வேண்டியதவசியம். முட்டையிடும் சமயத்தில் இத்தீவனம் கொழுக்காமல் முட்டையிடும் சமயத்தில் கோழிகளுக்கு கொடுக்கும் தீவனத்துடன் நல்ல மிழகைத் தூள் பண்ணி கலந்து உபயோகித்து வந்தால் கோழிகளிடும் முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சள் கரு சிகப்பு வர்ணத்துக்கு ஒத்தாப்போல் ஆய்விடுகிறதென்று கண்டு பிடித்து இந்த மிழகு பொடி கோழிகள் தீவனத்துடன் கலந்து கொடுத்து வருகிறார்கள்.

"கிருஷிகன்" பஞ்சாங்கம்.

பிரபவஸூ மார்கழிமூ—சாலிவாகன 1850 கலியுகாதி 5029

பசலி 1337—கொல்லம் 1103—ஹிஜரா 1346,

இங்கிலீஷ் 1927-ம் ஸூ டிசம்பர்; 1928 ஜனவரி மாதங்கள்.

ஜமாதல் ஆகிர்	டிசம்பர்	மார்கழி	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்,	விசேஷங்கள்
21	16	1	வெ	அஷ்30-18	உத45-53	சி46	விதைக்க
22	17	2	சனி	நவ36-8	அஸ்52-41	ம60	கதிரறுக்க
23	18	3	ஞா	தச42-36	சித்60-0	சி60	மாடுவாங்க
24	19	4	திங்	ஏகா49-11	சித்0-38	ம1அ	விதைக்க
25	20	5	செவ்	து55-16	சுவா8-11	சி8ம	விதைக்க
26	21	6	புத	திர60-0	விசா15-6	சி60	கரிநாள்
27	22	7	வியா	திர0-31	அனு21-18	சி21ம	கடன் தீர்க்க
28	23	8	வெ	ச ● 4-51	கேட்26-23	ம27அ	சர்வ அமாவாசை
29	24	9	சனி	அமா-7-56	மூல30-13	சி60	கரிநாள்
30	25	10	ஞா	பிர9-38	பூரா32-58	சி33அ	மாடுவாங்க
1	26	11	திங்	துதி10-11	உத்34-31	ம35அ	கரிநாள்
2	27	12	செவ்	திரி8-21	திரு34-58	சி60	கெற்போட்டம்
3	28	13	புத	சது8-58	அவி34-33	ம35சி	விதைக்க
4	29	14	வியா	பஞ்5-28	சதை33 11	ம33சி	மாடு வாங்க
5	30	15	வெ	சஷ்2-8 சப்57-52	பூரட்31-1	சி60	ஏற்றம் நட
6	31	16	சனி	அஷ்53-3	உத்28-6	சி28ம	கதிரறுக்க
7	1	17	ஞா	நவ47-41	ரேவ24-41	அ25சி	சுபமுகூர்த்தம்
8	2	18	திங்	தச41-48	அஸ்20-36	சி60	தானியம் செலவிட
9	3	19	செவ்	ஏகா35-38	பர*16-18	சி60	வைகுண்ட ஏகாதசி
10	4	20	புத	து29-21	கி11-46	அ12சி	கடன் தீர்க்க
11	5	21	வியா	திர23-13	ரோ7-21	ம60	யாத்திரை நீக்க
12	6	22	வெ	ச ○ 17-36	மிரு3-13 திரு56.47	சி60	ஆருத்ரா தரிசனம்
13	7	23	சனி	பொ12-31	புன57-6	சி60	ஷை சில சோவில்
14	8	24	ஞா	பிர8-36	பூச55-41	சி60	சாந்தி செய்ய
15	9	25	திங்	துதி5-56	ஆயி55-43	சி56ம	விதைக்க
16	10	26	செ	திரி4-51	மக57-31	சி60	தானியம் செலவிட
17	11	27	புத	சது5-21	பூர60-0	அ60	மாடு வாங்க
18	12	28	வியா	பஞ்7-41	பூரம்1-3	சி1ம	தானிய மறுக்க
19	13	29	வெ	சஷ்11-41	உத்6-11	சி6அ	போகி பண்டிகை

The Journal of the Madras Agricultural Students' Union.

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs Four. Single copy as Six.

Apply to Manager M A. S. U. Journal.

AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P O. *Coimbatore.*

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

சண்பகவிஜயம

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது.

இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு. அ சுப்பரமண்ய பாரதியரர் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

விவசாய புஸ்தகங்கள்

	ரூ அ பை
விவசாய விளக்கம்	1—4—0
நெல்	1—0—0
கரும்பு	1—0—0
மா	0—7—0

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்
பெரியபாளையம் போஸ்ட், பொன்னேரி மார்க்கம்.

புதிது! புதிது!! புதிது!!!

விசித்திரத்

துப்பறியும் கண்

அதி ஆச்சரிய அற்புத
ஸமத்காரமான திடுக்கிடும் சூட்சிகளும்
காட்சிகளும் அடங்கிய புதுவிதமான
ஜயவீரத் துப்பறியும் நாவல்.

பிரஜாநுகூலன், ஆநந்தகுணபோதினி பத்திரிகைகளின் பத்திராசிரியரும், பிரபல கிரந்தகர்த்தாவுமாகிய ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு அவர்கள் இயற்றியது, புதுமுறையில் அமைத்தது.

இதில் தோன்றும் 10-பாகங்களின் திடுக்கிடும் விஷயங்களும், டாக்டர் பிரஹதீசனின் துப்பறியும் தீரச் செயல்களும் இதுவரையில் எந்த நாவல்களிலும் காணாத நூதன விதமாயிருக்கும். எல்லாம் பிரமிக்கும் பயங்கர ஆச்சரிய மர்மங்களே!

600-பக்கங்கள் கொண்டது. ஐம்பது காதற் கடிதங்களும், மற்றும் அனேக அநுபவங்களும், போதனைகளும், பத்து பகுதிகளும் ஒருங்கே கலந்து மஹா அற்புதகரமான முறையில் நவீனமாய் முடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நாவலைப்போன்ற நாவல் இதுகாறும் எழுதப்பட்டதில்லை யென்று அதை வாசிப்பவர்கள் தாங்களே நிச்சயமாய்ச் சொல்லுவார்கள். விலை ரூபா 3. வி. பி. செலவு அணா 10. உடனே எழுதுங்கள்.

☞ பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

Printed and Published by J. R. Ranga Raju at the
Raju Press" "Jagannatha Baugh" Saidapet, (Madras.)